278

278
1164

கந்தன் வாசகம்

1211

நான்காம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1938
MADRAS



மதராஸ் பிரீமியர் கம்பெனி,
சென்னை.

கந்தன் வாசகம்

நான்காம் புத்தகம்

OFFICE OF THE ... 9-JAN 193... MADRAS

1211
4 2 8 ...

மதராஸ் பிரீமியர் கம்பெனி

3, பெரியண்ண மேஸ்திரி தெரு

ஜி. டி. சென்னை

பதிப்புரிமை] 1935 [விலை அணா 5.

MADRAS:
PRINTED AT THE "SATYA NESAN" PRESS
3,27, BROADWAY

First Edition 1935

OFFICE OF THE ... OF ...
9-JAN 1936
MADRAS

முகவுரை

கந்தன் வாசக வரிசையில் நான்காவதான இப் புத்தகம் நான்காவது வகுப்பிற்கு உரியதாகும்.

"இளமையிற் கல்" என்னும் மூதுரையை யொட்டிச் சிறுவர், சிறுமியர் இவர்களின் கல்வி அறிவை வளர்ப்பதே இவ்வாசக வரிசையின் நோக்கம். நவீன முறையை அநுசரித்து, இனிய கதைகளும், கதைப் பாடல்களும், நீதி புகட்டும் செய்யுட்களும், விடுகதைகளும், பேசும் திறமையை விருத்திசெய்யச் சப்பாஷணைகளும், சிறு பிள்ளைகளுக்கேற்ற எளிய நடையில் எழுதப் பெற்றுள்ள இவ்வாசகம், நுண்ணிய அறிவைப் பெருக்கி, நன்னடையில் அவர்களைப் பழக்கி, சிறந்த தேசபக்தர்களாக்கும் என்பது திண்ணம்.

ஆகவே அரசாங்கத்தாரும், ஆசிரிய நண்பர்களும் இப் புத்தகவரிசையைத் தமது பாடசாலைகளில், பாட புத்தகமாக வைத்து, எம்மை ஆதரித்து, இதுபோன்ற முயற்சியில் எம்மை ஈடுபடச் செய்வார்களாக!

பொருள் அடக்கம்

		பக்கம்
1.	சரஸ்வதி துதி	1
2.	ஜார்ஜ் சக்கரவர்த்தி	2
3.	இராமன் நல்லபிள்ளை	3
4.	பெருந்தன்மை	7
5.	சகுனம்	8
6.	தெனுலிராமன்	10
7.	பலா	13
8.	பூச்சிகள் என்றால் யாவை ?	17
9.	பாம்பாட்டி	20
10.	கம்பரும் சோழனும்	21
11.	தேசிங்கு	25
12.	மேகமும் மழையும்	28
13.	சுகாதார விதிகள்	31
14.	நல்ல சிநேகிதர்	33
15.	புத்தர் பெருமான்	37
16.	சுதேச கீதம்	40
17.	பத்மினி	41
18.	விறகுவெட்டியும் தங்கக் கோடரியும்	46
19.	உப்பு	49
20.	புத்தியில்லாத வேலைக்காரன்	51
21.	குடும்பம்	54
22.	சுகாதாரம்	55
23.	ரப்பர் மரம்	58
24.	மின்சார வண்டி	62
25.	தீக்குச்சி செய்தல்	65
26.	புத்திசாலித்தனம்	69
27.	பாப்பாவுக்கு அறிவுறுத்தல்	72
28.	ஊர்வன	73
29.	நவராத்திரி என்றால் என்ன ?	77
30.	ஸ்தல சுய ஆட்சி	82
31.	ஸர் ஜகதீச சந்திரபோஸ்	85
32.	வெற்றிவேற்கை	89

அன்பே தெய்வம்

OFFICE OF THE ... 9-JAN 1936 MADRAS

கந்தன் வாசகம்

(நான்காம் புத்தகம்)

1. சரஸ்வதி துதி

புத்தகத்துள் உறை மாதே!
பூவில் அமர்ந்துறை வாழ்வே!
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்!
வேதப் பொருளுக்கு இறைவி!
முத்தின் குடை உடையாளே!
மூவுலகும் தொழும் தேவி!
முத்து நிறைத்த வெண்பல்லாய்!
முருக்கம் பூ மேனி நிறத்தாளே!
சாலு நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூஜை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பரவித் தொழுவோம் நங்காய்
நங்காய்! நங்காய்! நமோஸ்து
ஞானக் கொழுந்தே! நமோஸ்து
கல்விக் கரசே! நமோஸ்து
கணக்கறி தேவி! நமோஸ்து
சொல்லும் பொருளே! நமோஸ்து
சூக்ஷம ரூபி! நமோஸ்து.

2. ஜார்ஜ் சக்கரவர்த்தி

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இது பெரிய தேசங்களுள் ஒன்று. இதை நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி ஆளுகின்றார். அவர் ஆயிரம் மைல் தூரமுள்ள லண்டன் பட்டணத்தில் வசிக்கின்றார். அந்தப் பட்டணம் உலகத்திலே பெரிய பட்டணங்களில் ஒன்று. அதற்கு

நாம் கப்பலில் ஏறிக் கடல் மார்க்கமாகச் செல்ல வேண்டும். அந்த ஊர் செல்ல இரண்டு வாரங்களுக்குமேல் ஆகும்.

அந்த ஊரிலிருக்கும் நமது ஜார்ஜ் மன்னர் உங்களைப்போலவே இளமையில் கல்வி கற்றார்; விளையாடினார். கஷ்டமான வேலைகள் செய்து எல்லாத் தொழில்களையும் தெரிந்துகொண்டார். பணக்காரப் பிள்ளைகளில் சிலர் தொழில் செய்வது இழிவான காரியம் என்று நினைக்கிறார்கள். அது தப்பு. நமது மன்னர் இளமையில் அப்படி யிருக்கவில்லை. அவர் கப்பல் வேலையில் அமர்ந்து கரி தள்ளுவது, கப்பல் ஓட்டுவது, முதலிய பல வேலைகளையும் செய்து வந்தார்.

ஒருநாள், துருக்கி தேசத்துப் பாக்ஷா, ஜார்ஜைக் காணக் கப்பலுக்கு வந்தார். கப்பல் தலைவன் அவரைக் கொண்டுவந்து பாக்ஷா முன் நிறுத்தினான். பாக்ஷா, 'இவர் விக்டோரியா மஹாராணியாரின் பேரராக எப்படி யிருக்க முடியும்? தலைமுதல் கால் வரையில் கரிவேஷமா யிருக்கின்றாரே! நம்மை ஏமாற்றத்தான் கப்பல்

தலைவர் வேறொருவரைக் கொண்டுவந்து நிறுத்தி, இப்படிச் செய்தாரோ,' என்று சந்தேகங்கொண்டு, முன்னே நின்றவருடன் பேச ஆரம்பித்தார். அவரது பெருந்தன்மையையும், மரியாதையுமான வார்த்தைகளையுங் கேட்டு, இவரே ஜார்ஜ் என்று தெளிந்தார். அவருடைய ஆடம்பர மற்ற வாழ்க்கையையும் பெருமை இல்லாமல் சாதாரணத் தொழில் செய்யும் தன்மையையும் பாக்ஷா கண்டு, அவரைப் போற்றினர்.

ஆதலால், சிறுவர்களே, நீங்கள் செல்வப் புத்திரரா யிருந்தாலும் பெருமை பாராட்டாமல் தொழில் செய்து மேன்மை அடையுங்கள்.

குறிப்புரை :

சக்கரவர்த்தி=அரசர்களுக்கு அரசன்; மார்க்கமாக=வழியாக; இழிவான=தாழ்வான; தெளிந்தார்=சந்தேகம் நீங்கினர்; ஆடம்பரமற்ற=வீண் டம்பமில்லாத; போற்றினர்=புகழ்ந்தார்.

வினக்கள் :

1. நமது இந்தியா தேசத்தை ஆளுவது யார்? அவர் எங்கே வசிக்கிறார்?
2. அவரது அரிய குணங்கள் எவை?
3. அவரைப் பார்த்த துருக்கி பாக்ஷா முதலில் என்ன நினைத்தார்? பிறகு என் அவரைப் போற்றினர்?
4. இதனல் நீங்கள் தெரிந்துகொள்வது என்ன?

---

3. இராமன்—நல்லபிள்ளை

வடக்கே அயோத்தி என்று ஒரு நகரம் இருக்கிறது. வெகு நாட்களுக்குமுன் தசரதர் என்ற ஒரு அரசர் அதை ஆண்டுவந்தார்.

அவருக்கு நான்கு பிள்ளைகள் உண்டு. மூத்தவன் பெயர் இராமன். இளையவர்கள், பரதன், இலக்ஷ்மணன், சத்துருக்கனன்.

பிள்ளைகள் நால்வரும் நேசமாயிருந்தார்கள். ஒருவரைவிட்டு ஒருவர் பிரியமாட்டார்கள். பள்ளிக்கூடத்தில் சேர்ந்து நன்றாகப்படித்தார்கள். வில்வித்தை, யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவைகளில் அவர்கள் நல்ல தேர்ச்சி அடைந்தார்கள்.

இராமன் பெரியவன் ஆனான். தசரதர் அவனுக்குச் சீதை என்னும் அழகிய பெண்ணைக் கலியாணம் செய்து வைத்தார். இராமன் பட்டத்திற்குத் தகுதி யுடையவன் ஆனான். தசரதர் இராமனுக்குப் பட்டம் சூட்ட நாள் நிச்சயித்தார்.

தசரதருக்கு மூன்று மனைவிகள் உண்டு. அவர்கள் கோசலை, கைகேயி, சுமித்திரை என்பவர்கள். இளைய மனைவி கைகேயினிடத்தில் தசரதருக்கு அதிகப் பிரியம். அவள் தன் புத்திரன் பரதனுக்குப் பட்டம் கட்டவேண்டுமென்று கேட்டாள். அத்துடன் இராமனைப் பதினான்கு வருடம் காட்டிற்கு அனுப்பவேண்டும் என்றும் சொன்னாள். தசரதர் அதற்குச் சம்மதிக்க நேர்ந்தது.

உடனே கைகேயி இராமனை அழைத்தாள். இராமன் சிற்றன்னையிடம் வந்து வணங்கி நின்றான். "அப்பா இராமா, நீ பதினான்கு வருஷங்கள் காட்டில்போய் வசிக்கவேண்டும். உன் தம்பி பரதன் பட்டங்கட்டி இங்கே இராஜாவாக இருப்பான். இது தந்தையின்

கட்டளை" என்று இராமனைப் பார்த்துக் கைகேயி சொன்னாள்.

இராமன், "நல்லது அம்மா, நான் அப்படியே போய்வருகின்றேன்" என்று சொல்லிக் காட்டிற்குப் புறப்பட்டான். அவனுடன் அவன் மனைவி சீதையும் தொடர்ந்து சென்றாள். எப்பொழுதும் பிரியாத தம்பியாகி இலக்ஷ்மணனும் அவன் கூடவே சென்றான்.

இவர்கள் சென்றபின், பரதனைப் பட்டம் கட்டிக்கொள்ள அவன் தாயார் கைகேயி வேண்டினாள். அவன், "என் அண்ணனுக்குத் துரோகம் செய்யமாட்டேன். இப்படி நீ செய்யலாமா?" என்று தாயாரைக் கடிந்தான். பின்பு அவன் காட்டிற்கு ஓடி இராமனை நாட்டிற்கு வந்து இராஜாவாக இருக்கும்படி வேண்டினான். இராமன் அதற்குச் சம்மதிக்கவில்லை. பரதன் வருத்தத்துடன் திரும்பி வந்துவிட்டான்.

இராமனும், சீதையும், இலக்ஷ்மணனும் காட்டில் பல இடங்களில் சென்று வசித்தார்கள். ஒருநாள் இராமனும் இலக்ஷ்மணனும் வெளியே போனார்கள். அப்பொழுது சீதை தனியே இருந்தாள். அவளை இலங்கை அரசனாகிய இராவணன் தூக்கிக்கொண்டு போய்விட்டான். திரும்பிவந்த சகோதரர்கள் சீதையைக் காணாமல்

வருத்தப்பட்டார்கள். காட்டில் எங்கும் தேடி அலைந்தார்கள். கடைசியில் ஹநுமார் சீதை இருக்கும் இடத்தைக் கண்டறிந்தார்.

பின்பு அவர்கள் இலங்கைக்குச் சென்று இராவணனுடன் சண்டையிட்டார்கள். அதில் இராவணன் இறந்தான். பின்பு சீதையை மீட்டுக் கொண்டார்கள்.

கைகேயி சொன்ன பதினான்கு வருஷங்கள் முடிந்தன. உடனே அம்மூவரும் அயோத்திக்குப் போனார்கள். அவர்களை யாவரும் அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். பரதன் தன் பட்டத்தை இராமனுக்குக் கொடுத்து அரசன் ஆக்கினான். இராமன் பட்டாபிஷேகம் செய்து கொண்டு நீதியாக அரசாட்சி செய்தான்.

இ ரா ம ன் தந்தைசொல் தட்டாதவன். அவனை யாவரும் கொண்டாடினார்கள். அதனால் அவன் நல்ல பிள்ளை என்று பெயர் எடுத்தான்.

குறிப்புரை :

நகரம்=பட்டணம்; தகுதியுடையவன்=ஏற்றவன்; துரோகம்=குற்றம், தப்பிதம்; கடிந்தான்=கோபித்தான்; வரவேற்று=எதிர்கொண்டழைத்து.

வினாக்கள் :

1. இராமன் யார்? அவனுக்கு இளையவர்கள் எத்தனை பேர்? அவர்கள் பெயர்களென்ன?
2. தசரதருக்கு எத்தனை மனைவிகள்? அவர்கள் பெயரென்ன?
3. இராமன் ஏன் காட்டிற்குச் சென்றான்? அவனுடன் வேறு யார் காட்டிற்குச் சென்றது?
4. இராமனை ஏன் நல்ல பிள்ளையென்று சொல்லவேண்டும்?



4. பெருந்தன்மை

ஐரோப்பாவிலே, சர் பிலிப் சிட்னி என்ற ஒரு துரைமகனார் இருந்தார். அவர் படைத் தலைவராக இருந்து யுத்தங்கள் பல செய்தார். ஒரு போரில் அவர் படுகாயம் பட்டார். அவரைச் சிப்பாய்கள் டோலியில் கட்டிக் கூடாரத்திற்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். அப்போது அவர் நா வறட்சியினால் "தண்ணீர்! தண்ணீர் !!" என்று கூவினார். அதுசமயம் தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியில் சிரமப்பட்டுச் சிறிது தண்ணீரை ஒருவன் கொண்டுவந்து கொடுத்தான்.

கடுந்தாகங் கொண்ட பிலிப் துரை, அதை ஆவலுடன் வாங்கி, வாயில் வைத்துக் குடிக்கப் போனார். அந்தச் சமயத்தில் யுத்த முனையில் குண்டடி பட்டு, இறக்குந் தருவாயிலிருந்த, ஒரு படைச்சேவகனைச் சிலர் அவ்வழியே தூக்கிக் கொண்டு போனார்கள். அவன் தண்ணீரை ஆவலாய்ப் பார்த்தான். அதைக் கண்ட அத்துரை, "என்னுடைய தாகத்தினும்

அவனுடைய தாகம் பெரியது. இத்தண்ணீரை அவனுக்குக் கொடுங்கள்,'' என்று வாயில் வைத்திருந்த பாத்திரத்தை எடுத்து அவனுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டார். அப்படியே அவர்கள் அந்தத் தண்ணீரை அவனுக்குக் கொடுத்தார்கள்.

அவருடைய இந்தச் செயல் ஐரோப்பா முழுதும் தெரிந்தது. எல்லோரும் அவருடைய பெருந்தன்மையைப் புகழ்ந்தார்கள்.

குறிப்புரை :

பெருந்தன்மை = மேன்மை, உயர்ந்த குணம்; கடுந்தாகம் = அதிக தாகம்; புகழ்ந்தார்கள் = கொண்டாடினார்கள்.

வினுக்கள் :

1. சிட்னி யார்? அவருக்கு என்ன ஆபத்து நேர்ந்தது?
2. அவர் செய்த சிறந்த செய்கை யாது?



5. சகுனம்

சந்தானபுரம் என்னும் ஒரு பட்டணத்தில் சந்திரசேகரன் என்ற அரசன் ஒருவன்

இருந்தான். அவன் ஒருநாள் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்து, தலையை ஜன்னலின் வழியாக நீட்டிப் பார்த்தான். வீதியில் சிந்தி யிருக்கும் பண்டங்களை ஒரு ஏழைச் சிறுவன் பொறுக்கிக் கொண்டிருந்தான். அரசன் அச் சிறுவனைக் கண்டதும், அவனும் தற்செயலாய் அரசனை நோக்கினான்.

பிறகு, அரசன் தலையை உள்ளே இழுக்கும் போது, தலை சாளரத்தின் உச்சியில் பட்டு இரத்தம் அதிகமாகச் சொட்டியது. அரசன் அதனால் கோபம் அடைந்து, அப்பையனைப் பிடித்துவரும்படி சேவகருக்குக் கட்டளை யிட்டான். சேவகர்கள் தேடிப் பிடித்து அச் சிறுவனை அரசன் முன்னே கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அரசன் சிறுவனைப் பார்த்து "இன்று நான் அதிகாலையில் எழுந்து, உன் முகத்தில் விழித்ததினால் அல்லவா எனக்குத் தலையில் காயம் பட்டு இரத்தம் சொட்டியது? ஆதலால் உன் முகம் மிகவும் கொடியது. இனி இந் நகரத்தில் உள்ளோர் உன்முகத்தில் விழித்தால் என்னைப் போலவே பலரும் துன்பம் அனுபவிப்பார்கள். அதற்காக உன் தலையை வாங்கும்படி தீர்ப்பு அளிக்கின்றேன்" என்று சொன்னான்.

சிறுவன் அது கேட்டுத் திடுக்கிட்டு, அரசனைப் பார்த்து, "சுவாமி, இவ்வேழையைப் பார்த்ததால் தங்களுக்கு இந்தச் சொற்பக் காயம் பட்டுத் துன்பம் உண்டாகியது. நான் இன்று தேவரீர் திருமுகத்தில் விழித்ததற்கு என் தலை போகும்படி நேரிட்டதே? இந்தக் கொடுமையை

எங்குபோய்ச் சொல்லுவேன்?" என்று வணக்கமாகச் சொன்ஞன்.

அரசன் அது கேட்டுத் தனது அநீதியான தீர்ப்புக்காக வெட்கம் அடைந்து, சிறுவனை விடுதலை செய்துவிட்டான்.

குறிப்புரை :

சாளரம் = ஜன்னல், பலகணி; துன்பம் = கஷ்டம்; அளிக்கின்றேன் = கொடுக்கின்றேன்.

விஞக்கள் :

1. அரசனுக்குக் காயம்பட்டதால் அவன் என்ன செய்தான்?
2. சிறுவன் அரசனுடைய ஆக்கினையிலிருந்து எப்படித் தப்பித்துக்கொண்டான்?

---

6. தெஞலிராமன்

ஆந்திரதேசத்தில் தெஞலி எனும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் ராமன் என்ற சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் இளமையிலிருந்தே யாருடனும் விகடமாய்ப் பேசுவான். அவன் விகடங்கள் எல்லோருடைய மனங்களையும் களிப்பித்தன. அதனுல் அவன் பேசும் விகட மொழிகள் எத்தேசத்திலும் பரவின. எங்கும் தெஞலிராமன் பெயர் விளங்கியது.

தெஞலிராமன் சிறுவஞக இருக்கும்போது ஒருநாள் வீதியில் விளையாடிக்கொண்டிருந்தான். அவ்வழியே சந்நியாசி ஒருவர் சென்று கொண்டிருந்தார். அவர், தெஞலிராமனின் விநோத விளையாட்டுக்களையும், வேடிக்கையான

பேச்சுக்களையுங் கண்டு சிறிதுநேரம் அங்கே நின்ருர். ராமன் இயற்கையிலேயே வசீகரமான முகமுள்ளவன். எப்பொழுதும் புன் சிரிப்புடன் இருப்பான். சந்நியாசிக்கு அவனிடத்தில் அன்பு அதிகம் உண்டாயிற்று. பெரியவர் "இவன் முன்னுக்கு வருவான்" என்று கருதி அவனுக்கு மந்திரம் கற்றுக்கொடுத்தார்.

அவன் அம் மந்திரத்தை மெதுவாய்ப் பல தடவை சொல்லிக் கொண்டிருந்தான். அது அவனுக்கு விநோதமாக இருந்தது. ஒருநாள் அவன் வீட்டிற்கு அருகில் இருந்த காளி கோயிலுக்குப்போய், ஒளிந்து சிறுவர்களுக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தான். அவன் அப்பொழுதும் அம் மந்திரத்தை உச்சரித்து விளையாடினன். காளி திடீரென்று அவன்முன், கோரைப்பல்லுடன் கூடிய அநேக முகங்களைக் காட்டிக், கண்டோர் அஞ்சும்படி நின்ருள்.

தெனுலிராமனே குறும்புக்காரன். எதற்கும் அஞ்சாதவன். ஆதலால், காளி தேவியின் முகத்தைப் பார்த்துச் சிரித்தான். கைகொட்டி, "எத்தனை மூக்கு அம்மா உனக்கு! இந்த ஒரு மூக்கில் சளி பிடித்தால் எங்களுக்கு இரண்டு கைகள் போதவில்லையே! உனக்கு இத்தனை மூக்கிலும் சளிபிடித்தால் உனக்குள்ள இரண்டு

கைகள் போதுமா?" என்று பரிகாச மொழிகள் சொல்லிக் கெக்கொலி கொட்டினன்.

காளி அவனுடைய தைரியத்தையும் விகடப் பேச்சுக்களையுங் கண்டு மகிழ்ந்து, "அப்பா நீ எப்பொழுதும், எல்லோர்க்கும் சிரிப்பைத் தந்து மகிழ்விக்கும் விகடகவியாக இருந்து வாழ்வாய்" என்று ஆசீர்வதித்தாள். தெனலிராமன், "அம்மா, எனக்கு இது நல்ல பெயர். விகடகவி என்னும் பெயரை முதலிலிருந்து வாசித்தாலும் விகடகவி; பின்னிருந்து திருப்பி வாசித்தாலும் விகடகவி. என் பெயர் யாருக்கு உண்டு?" என்று சொல்லி அதிகம் மகிழ்ந்தான். தேவியும், "நீ விகடகவியாக இருந்து வாழ்வாய்" என்று சொல்லி மறைந்தாள். பின்பு, தெனலிராமன், அரசர் சபைக்குச் சென்று, விகடம் பேசி, ஆனந்தத்தை விளைவித்து வந்தான். அதனல் அவன் நல்ல பொருளையும் கீர்த்தியையும் அடைந்து வாழ்ந்தான்.

குறிப்புரை :

இளமையிலிருந்தே = சிறுவயதில் இருந்தே; விகடமாக = வேடிக்கையாக, கேலியாக; களிப்பித்தன = சந்தோஷப்படுத்தின; வசீகரமான = அழகிய; விநோதமாயிருந்தது = வேடிக்கையாக இருந்தது; குறும்புக்காரன் = சேஷ்டை செய்பவன்; கெக்கொலி கொட்டினன் = கைகொட்டிச் சிரித்தான்.

வினக்கள் :

1. தெனலிராமன் யார்? அவனுக்கு அப்பெயர் வழங்கிய காரணம் என்ன?
2. அவனுக்குச் சந்நியாசி என் மந்திரம் கற்றுக்கொடுத்தார்?
3. அவன்முன் காளி தோன்றியபோது என்ன செய்தான்?
4. தெனலிராமன் விகடகவியானது எப்படி?



7. பலா

நமது தேசத்தில் பலவகைப் பழங்கள் உண்டு. எல்லாவற்றிலும் பெரியது பலா. அது முக்கனிகளில் ஒன்று. வாழை, மா, பலா முக்கனிகள்.

பலா உஷ்ண பூமியில் நன்ருக வளரும். அதற்குச் செம்மண் பூமியும், செம்மண் கலந்த மணல் பூமியும் சிறந்தவை.

பலாச் செடி பலாக் கொட்டையில் இருந்து முளைக்கிறது. நன்ருக முதிர்ந்த பழத்தின் கொட்டைகளை அவற்றின் மேல்தோலை நீக்காமல் நடவேண்டும். நட்ட பத்து நாட்களில் முளைக்க ஆரம்பிக்கும். அதுமுதல் அதற்குத் தண்ணீர் ஊற்றி வரவேண்டும். ஆறுமாதங்களுக்குப் பிறகு

அச் சிறு செடிகளைப் பிடுங்கி வேறு இடங்களில் நடவேண்டும். நிழலில் நடுதல் கூடாது. வெயில் நன்ருக அதன்மேல் படவேண்டும். பலா நட்ட ஐந்து வருடங்களில் பலன் தரும்.

பலாமரம், மா, வேம்பு முதலிய மரங்களைப் போல் தழைத்து வளரும். அதன் இலை ஆல் இலைபோல் இருக்கும். ஆனல் சற்று முறடாக இருக்கும். பலா மரம் மிகவும் பலம் உடையது. அதன் கிளைகள் உறுதியானவை.

பலா மரத்திற்குப் புஷ்பம் இல்லை. அது புஷ்பிக்காமல் காய்க்கும் மர வகையில் ஒன்று. பலா தோன்றும்போதே காயாகத் தோன்றுகிறது. காய் சிறிதாயிருக்கும்பொழுது அதற்குப் பலா மூசு என்று பெயர். மற்றப் பழங்களைப்போல் அது மரத்தின் உச்சியிலாவது அல்லது இளங் கிளைகளிலாவது காய்ப்பது இல்லை. பலா பெரிய கிளைகளின் அடி பாகத்திலும், அடி மரத்திலும் காய்க்கும்.

பலாப்பழம் பச்சையாக இருக்கும். அதன் மேல் கெட்டியான தோல் மூடியிருக்கும். தோலின் மேல் முட்கள் இருக்கும்.

தோலைப் பிளந்தால் உள்ளே சுளைகள் காணப்படும். மிகப் பெரிய பழமாக இருந்தால் சுமார் முன்னூறு அல்லது நானூறு சுளைகள் இருக்கும். சுளைகளைச் சடைபோன்ற தோல் மூடிக்கொண்டு இருக்கும், இதற்குக் கொக்கி என்று பெயர். கொக்கியை நீக்கியே சுளையை எடுக்க வேண்டும்.

சுளைக்கு உள்ளே கொட்டை உண்டு. கொட்டையை இருவகைத் தோல் மூடிக்கொண்டு

இருக்கும். அத்தோல்கள் கிழியாமல் அப்படியே நட்டால் அவை பத்து நாட்களுக்குள் முளைக்கும்.

பலாவில் மூன்று வகை உண்டு. அவை பிஞ்சுப் பலா, கொம்புப் பலா, வேர்ப் பலா என்பன. பிஞ்சுப் பலா உயர்ந்து வளரும். அதிகம் தழைத்து இருக்காது. அதன் காய் மட்டை நீக்கிய தேங்காய் அளவுதான் இருக்கும். பிஞ்சுப் பலா கறி சமைக்க உதவும். அது பழுப்பது இல்லை.

கொம்புப்பலா, மரத்தின்பெருங்கிளைகளிலும், அடி மரத்திலும் காய்க்கும். அவை மிகப் பெரிதாக இருக்கும். அதன் பழம் மிக ருசியாக இருக்கும். அதன் கொட்டையைச் சுட்டும் சமைத்தும் தின்பது உண்டு.

வேர்ப் பலா என்பது மரத்தின் வேரில் காய்க்கும். அது மலையாளத்தில் அதிகம். அது கொம்புப் பலாவைவிட ருசியாக இருக்கும்.

பலாவின் எல்லாப் பாகங்களும் நமக்கு உதவுகின்றன. அதன் அடிமரத்தைப் பலகைகளாக அறுத்து மரச் சாமான்கள் செய்ய உபயோகப் படுத்துகிறார்கள். பலாப் பலகை கெட்டியானது. பலா இலையைத் தைத்துச் சாப்பிட உபயோகப் படுத்துகிறார்கள். பட்டுப்போன மரம் அடுப்பு எரிக்க உதவும்.

பலாப் பழம் சாப்பிடுவதற்கு ருசியாக இருக்கும். ஆனால் அதிகம் சாப்பிடக்கூடாது. அதிகம் சாப்பிட விரும்புவோர், பலாச் சுளைகளை நெய்யில் அல்லது தேனில் தோய்த்துச் சாப்பிடல் நலம்.

பலாப் பழத்தின் தண்டிலும், தோலிலும்

பால் உண்டு. அதுபிசின்போல்ஒட்டிக்கொள்ளும். ஆகையால் பலாப்பழத்தை அறுப்போர் கையிலும் கத்தியிலும் எண்ணெய் தடவிக் கொள்வர். அப்போது அது கையில் ஒட்டாது. பலாச்சுளை பழுப்பதற்கு முன் வெண்மையாக இருக்கும். பக்குவமாகப் பழுத்து இருக்கும்போது கொஞ்சம் மஞ்சளாக இருக்கும். அதிகம் பழுத்துவிட்டால் அவை மிகவும் மஞ்சளாகக் காணும். பலாக் கொக்கியைச் சமைப்பது உண்டு. பலாத் தோலைச் சிறுக நறுக்கி மாடுகளுக்கு வைப்பர். அதை எருவாக உபயோகிப்பதும் உண்டு.

‘ அப்பன் சொறியன்
ஆத்தாள் சடைச்சி
அண்ணன் மோழை
தம்பி சர்க்கரைக் குட்டி ’—அது என்ன ?

குறிப்புரை :

வேம்பு=வேப்பமரம்; தண்டிலும்=காம்பிலும்; நறுக்கி= வெட்டி.

வினக்கள் :

1. முக்கனிகள் எவை ?
2. பலாவைப் பயிர்செய்யும் விதம் யாது ?
3. பலா மரத்திற்கும் மற்ற மரங்கட்கும் உள்ள பேதமென்ன ?
4. பலாப்பழம் உள்ளும், வெளியும் எப்படி இருக்கும் ?
5. மூன்றுவகைப் பலா எவை ?
6. பலாவின் வெவ்வேறு பாகங்களின் உபயோகங்கள் எவை ?



8. பூச்சிகள் என்றால் யாவை?

பூச்சிகளில் பலவிதமுண்டு. அவை உலகத்திலுள்ள உயிர் வர்க்கத் தொகையினும் அதிகமானவை. ஈ, தேனீ, வண்டு, பட்டாம் பூச்சி முதலியவைகளும் பூச்சி வர்க்கத்தில் சேர்ந்தவையே. பூச்சிகளில் பலவற்றை நமது வீடுகளிலும், தோட்டங்களிலும், வயல்களிலும், வனங்களிலும் காணலாம்.

சில பூச்சிகள் பறவைகளைப்போல வானில் பறக்கின்றன. சில பூச்சிகள் மிருகங்களைப்போல நிலத்தில் நடமாடுகின்றன. சில பூச்சிகள் நீர் வாழ்வனபோல நீரிலும் சஞ்சரிக்கின்றன.

இந்தப் பூச்சிகளிலே சிலவற்றிற்குச் சிறகுகள் உண்டு. சிலவற்றிற்கு அவை கிடையா. சில பூச்சிகள் ஆறு கால்களையும், சில பூச்சிகள் நான்கு கால்களையும் பெற்றிருக்கின்றன. சில பூச்சிகளுக்கு வழியுணரும் பரிசனிகள் உண்டு.

சிலவற்றிற்குக் கொட்டும் கொடுக்குகள் இருக்கின்றன.

பூச்சிகளின் உடலமைப்பைக் கவனித்தீர்களா? அவற்றின் உடல் சிறுசிறு வளையங்களை ஒன்ருய்ப் பொருத்தி வைத்ததுபோ லிருக்கிறது. அவ்விதமுள்ள உடலில் மூன்று பிரிவுகள் காண்கின்றன. அவை தலை, மார்பு, வயிறு என மூன்று பிரிவுகளாம்.



முதற் பிரிவில் தலை அமைந்திருக்கிறது. அது ஒரு குண்டுபோலக் காணப்படும். அதில் பரிசனி, கண்கள், வாய் முதலிய மூன்று உறுப்புக்கள் இருக்கின்றன. இம் மூன்றில் கண்கள் நமக்கு அமைந்திருப்பனபோல் இரா. அவைகள் பல நூறு கண்கள் ஒன்ருகப் பொருந்தியுள்ளன போலக் காண்கின்றன. அது ஏன் தெரியுமா? பூச்சிகள் நம்மைப்போல விரும்பியபடி தலையைத் திருப்பமுடியாது; அவை இருந்த நிலையிலிருந்தே நாலாப்பக்கமும் பார்ப்பதற்கு அவ்விதம் கண்கள் விசித்திரமாய் அமைந்து உள்ளன.



பரிசனிகள் தலைக்கு முன்னே நீண்டிருக்கும். அவை மயிரிழைபோலுள்ளன. அவற்ருல் பூச்சிகள் வழியுணர்ந்து செல்லும். பூச்சிகளின் வாயில் கூர்மையான சிறிய பற்கள் உண்டு. சில பூச்சிகளுக்கு நீண்ட நாக்குகளும் உண்டு.

உடலின் நடுப்பாகமாகிய மார்பில் கால்களும் சிறகுகளும் இருக்கின்றன. ஒவ்வொரு காலிலும் ஆறு கணுக்கள் உண்டு. ஆறு கால்களையுடைய பூச்சிகளுக்குப் பக்கத்திற்கு மூன்று கால்கள் வீதம் இருக்கும். ஆறு கால்களும் சிறகுகளும் பொருந்திய பூச்சிகளை விநோதத்திற்காக அறு கால் சிறு பறவை என்று அழைப்பார்கள்.

கடைசிப்பாகம் வயிறு. அது முன் சொன்ன இரண்டினும் பெரிது. அதில் குடல் முதலிய உறுப்புக்கள் உள்ளன. சில பூச்சிகளுக்கு இந்தக் கடைசிப் பாகத்தில் கொடுக்கும் அமைந்திருப்பதுண்டு. அதை நீங்கள் தேனீயில் காணலாம். தேனீ தொந்தரவு செய்கிறவர்களைக் கொட்டும்.

பூச்சிகளில் பல நமக்கு நன்மை செய்கின்றன. தேனீ இனிய தேன் கொடுக்கிறது. தேனைச் சாப்பிட்டு நாம் ஆரோக்கியம் அடைகிறோம். பட்டுப்பூச்சி பளபளப்பான பட்டுநூலளிக்கிறது. அதை அழகிய ஆடையாக நெய்து, உடுத்தி மன மகிழ்கிறோம். சில பூச்சிகள் அசுத்தங்களை யுண்டு சுற்றுப்புறங்களைச் சுத்தஞ் செய்கின்றன. சிறு பூச்சிகள் நமக்கு என்ன உதவி செய்கின்றன பாருங்கள்.

குறிப்புரை :

தொகையினும்=கூட்டத்திலும்; வனங்களிலும்=காடுகளிலும்; வானில்=ஆகாயத்தில்; நீர்வாழ்வன=தண்ணீரில் வசிக்கும் பிராணிகள்; வழியுணரும்=வழியைத் தெரிந்துகொள்ளும்; பரிசனிகள்=தொட்டு அறியும் அவயவங்கள்; உறுப்புகள்= அவயவங்கள்.

வினாக்கள் :

1. பூச்சிகள் எத்தனைவகைப்படும்?
2. பூச்சிகளின் உடல் அமைப்பு எப்படி யிருக்கிறது? அதன் பிரிவுகள் எவை?
3. பூச்சிகளின் தலையில் உள்ள உறுப்புக்கள் எவை?
4. பூச்சிகளின் கண்கள் எவ்வாறு அமைந்து உள்ளன? என்?
5. பூச்சிகளால் நமக்கு உண்டாகும் நன்மைகள் யாவை?



9. பாம்பாட்டி

1. நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே!
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே!
பாதலத்தில் குடிபுகும் பைகொள் பாம்பே!
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே.

2. வளைபுகும்போதே தலை நீட்டும் பாம்பே!
மண்டல மிட்டுடல்வளை வண்ணப் பாம்பே!
தளைக்கஞ்சி நின்றிடும் சத்தியப் பாம்பே!
தலையெடுத்தே விளையாடு பாம்பே.

3. குற்றமற்ற சிவனுக்குக் குண்டல மானாய்!
கூறுந்திரு மாலினுக்குக் குடையு மானாய்
கற்றைக் குழல் பார்வதிக்குக் கங்கண மானாய்!
கரவாமல் உளங்களித்து ஆடு பாம்பே.
ஆடுபாம்பே தெளிந் தாடு பாம்பே! சிவன்
அடியினை கண்டோமென்(று) ஆடு பாம்பே.

---

10. கம்பரும் சோழனும்

திருவழுந்தூர் என்னும் ஊரில் கம்பர் என்ற தமிழ் வித்துவான் ஒருவர் இருந்தார். அவர் கல்வியிற் சிறந்தவர். அவரிடத்தில் எல்லா வித்துவான்களுக்கும் மதிப்பு உண்டு. அதனால் அவருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று.

கம்பருடைய கல்வித் திறமையைச் சோழ மன்னன் கேள்விப்பட்டான். அவன் அவரை வரவழைத்துத் தனது அரசாங்கப் பண்டிதராக அமர்த்திக்கொண்டான். கம்பர் எப்பொழுதும் அரசனுடனேயே இருப்பார். அரசனும் அவரை அன்புடன் நேசித்து வந்தான். இருவரும் ஏற்றத் தாழ்வில்லாமல் மரியாதையாகப்பேசுவது அவர்களுடைய வழக்கம்.

ஒருநாள் அரசன் பூங்காவனத்திற்கு உலாவப் போனான். அவனுடன் கம்பரும் போனார். அரசன் பூங்காவின் காட்சியை நோக்கி, "இது எவ்வளவு அழகுடையதாக இருக்கின்றது! இவ்வழகிய காட்சியும் மற்ற ஜீவராசிகளும் எனக்கல்லவோ அடக்கமா யிருக்கின்றன!" என்று கம்பரிடம் சொன்னான். கம்பர் பரிகாசமாக,

"இவைகள் உமக்கு அடக்கம்; நீர் நமக்கு அடக்கம்" என்றார். அரசன் தனது அதிகார முறையில் கம்பரின்மீது கோபித்துக்கொண்டான்.

கம்பர், அரசனுடைய கோபம் பொறுமல், "இனி நான் உம்மிடம் இரேன். உலகத்தில் குரங்கை ஏற்றுக்கொள்ளாத கொம்பு இல்லை. அதுபோல் இக்கவியை ஏற்றுக்கொள்ளாதவர் யாரும் இலர். நீர் கொடுத்த பொருளை இதோ இங்கேயே விட்டுவிட்டேன். ஒன்றும் இல்லாமல் சென்று, கனகதண்டி ஏறி வருகின்றேன். உம்மைப்போன்ற அரசன் வெற்றிலைப்பாக்கு மடித்துக்கொடுக்க நான் மேன்மையுடன் வருகின்றேன்" என்று சொல்லி, அரைத் துணியுடன் வெளியே புறப்பட்டுவிட்டார்.

புறப்பட்டவர், மேற்கே சேரராஜ்யம் போய்ச் சேர்ந்தார். அங்கே சேரராஜனிடம் வெற்றிலைப் பாக்கு மடித்துக் கொடுக்கும் அடைப்பக்காரனாக வேலையில் அமர்ந்தார். முதலில் தான் கம்பரிடம் அடைப்பக்காரனாக இருந்ததாக அரசனிடம் மறைத்துச் சொன்னார். அரசன் அவரைச் சாதாரண வேலைக்காரனாகவே எண்ணியிருந்தான்.

அந்த ராஜ சபையில் வித்துவான்கள் பிரசங்கங்கள் செய்து வருவார்கள். அப்பொழுது அவர்களுக்கு விளங்காத பொருள்களை இந்த அடைப்பக்காரக் கம்பர் விளக்கிச் சொல்லுவார். அரசன் அடைப்பக்காரரின் கல்வித் திறமையை மெச்சி அவரை அதிகப் பிரியமாய் நடத்தி வந்தான். இது மற்ற வித்துவான்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் அடைப்பக்காரர்மீது பொறுமை கொண்டார்கள். அவருடைய ஊரும்

பெயரும் தெரியாததனுல், அவரை அம்பட்ட ஜாதியாஞகச் செய்யவேண்டுமென்று அப்புலவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள்.

புலவர்கள் செய்த சூழ்ச்சியைக் கம்பர் கலைமகளின் அருளால் ஜெயித்தார். அரசன் அப்பொழுது அவரைக் கம்பர் என்று அறிந்து கொண்டான். இதுவரையில் தனக்கு வேலையாளா யிருந்ததற்குக் கம்பரை மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். மேலும் கம்பருக்கு வேண்டிய பொருள் கொடுத்து மேன்மைப்படுத்திஞன்.

சோழராஜன் சபையில் கம்பர் இல்லாதது ஒரு பெருங்குறையாக இருந்தது. அரசன் கம்பர் இல்லாததற்கு மிகவும் வருத்தப்பட்டான். தன் ஆட்களை விட்டுக் கம்பரைத் தேடி அழைத்து வரும்படி ஏவிஞன். அவர்கள், சேர ராஜ்யத்தில் கம்பர் இருப்பதைக் கேள்விப்பட்டு அங்கே சென்ருர்கள். அங்கு கம்பரைக் கண்டு, தங்கள் அரசனின் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். கம்பர் சான்ருேர் ஆதலால், சோழராஜன்மீது இருந்த கோபத்தை விட்டுவிட்டார்.

கம்பர், சோழநாடு செல்லவேண்டியதைக் குறித்துச் சேரனிடம் தெரிவித்தார். சேரன் கம்பரை ஒரு பொற்பல்லக்கில் ஏற்றித் தாஞம் அவருடன் அமர்ந்து பலவித வரிசைகளுடன்



சோழ ராஜ்யத்திற்குச் சென்ருன். கம்பருடைய முன் ஏற்பாட்டின்படி சிலமணிநேரம் சேரராஜன் கம்பருக்கு அடைப்பக்காரனுக இருந்தான்.

இந்த வரிசைகளுடன் சென்றதைக் கண்ட சோழன் கம்பரை எதிர்கொண்டு அழைத்துத் தான் செய்த பிழையை மன்னிக்கும்படி வேண்டி உபசரித்தான். கம்பர் அவ்வுபசாரத்தை ஏற்றுச் சேரனை அவனுடைய ராஜ்யத்திற்கு அனுப்பி விட்டுச் சோழனிடத்தில் சுகமாக வாழ்ந்து வந்தார்.

கம்பர் தமிழில் இராமாயணக் கவிகள் எழுதி இருக்கின்ருர். இன்னும் அநேக நூல்களை இயற்றி யிருக்கின்ருர். "கல்வியில் பெரியவர் கம்பர்."

"மன்னனில் கற்ருேன் சிறப்புடையன்."

குறிப்புரை :

பண்டிதர் = புலவர்; ஏற்றத்தாழ்வில்லாமல் = வித்தியாசம் இல்லாமல்; பூங்காவனத்திற்கு=நந்தவனத்திற்கு; பொருமல்= தாளாமல்; கனகதண்டி=பொன்னுல்செய்த பல்லக்கு; சூழ்ச்சி= உபாயம்; சான்ருேர்=பெரியார்.

வினுக்கள் :

1. கம்பர் எங்கே பிறந்தார்? அவர் யாருடைய சபையில் புலவராக அமர்ந்தார்?
2. அரசன் கம்பர்மீது என் கோபித்துக்கொண்டான்?
3. கம்பர் கோபம் பொருமல் சொன்ன வார்த்தைகள் எவை?
4. கம்பரிடம் பொருமைகொண்டு புலவர்கள் செய்த சூழ்ச்சி என்ன?
5. இக் கதையால் நீ அறிந்துகொள்வதென்ன?

11. தேசிங்கு

தென்னுற்காடு ஜில்லாவில் செஞ்சி என்ற ஓர் ஊர் இருக்கிறது. அவ்வூரிலுள்ள இரண்டு உயர்ந்த குன்றுகளில் பெரிய கோட்டைகள் இருக்கின்றன. அவைகள் மிகப் பலமாகவும் விசித்திரமாகவும் கட்டப்பட்டு இருந்தன. அவற்றைப் பார்ப்போர், "இவற்றைக் கட்டியாண்ட அரசன் எத்துணைப் பலாட்டியனே!" என்று புகழ்வார்கள்.

அந்தக் கோட்டைகளிலிருந்து தேசிங்கு என்னும் மன்னன் செஞ்சி மாகாணத்தை ஆண்டுவந்தான். அவனை ஜெயசிங்கன் என்றும் அழைப்பார்கள். அவன் இளம்பிராயமுதல் சிங்கக்குட்டிபோலக் கர்ஜ்ஜித்து விளையாடுவான். சிலம்பம் பழகுதல், குஸ்தி பிடித்தல், வாள் வீசுதல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம் முதலிய போர் விளையாட்டுக்களைச் செய்து நல்ல தேர்ச்சி அடைந்திருந்தான்.

செஞ்சி மாகாணம் ஆற்காட்டு நவாப்பின் அதிகாரத்திற்கு உட்பட்டது. செஞ்சி ராஜன் வருடந்தோறும் நவாப்புக்குச் சிறிது தொகை கப்பங்கட்டி வரவேண்டும். பட்டத்திற்கு வந்த பிறகு தேசிங்கு கப்பங்கட்டி வருவதை நிறுத்திவிட்டான். அதற்குக் காரணம், "நான் நவாப்பின் வல்லமைக்குத் தாழ்ந்தவன் அல்லன்" என்று அவன் எண்ணியதேயாகும். பாக்கி அதிகம் ஆகிவிடவே, கப்பத் தொகையைக் கண்டிப்பாய் வசூலிக்க நவாப்பு, தோன்றமல்லன் என்பவனைத் தேசிங்கினிடம் அனுப்பினுன்.

தேசிங்கு சிறந்த விஷ்ணுபக்தன். ஸ்ரீரங்க நாதரைப் பூசிப்பவன். அவரைத் தரிசிக்காமல் ஒருபொழுதும் இருக்கமாட்டான். அது தெரிந்த தோன்றமல்லன் நெற்றியில் நாமத்தைச் சாற்றிக் கொண்டு பயபக்தியுடன் தேசிங்குராஜன் கொலுவிற்குப் போனான். அங்கே தேசிங்கைக் கண்டுக் கப்பத்தொகை கேட்டான்.

தேசிங்குக்கு என்றும் இல்லாத கோபம் பிறந்துவிட்டது. "யாரடா என்னைக் கப்பம் கேட்பவன்? உனது யஜமானன் வந்து இப்பொழுது கேட்டு இருந்தால் அவன் என்ன பாடு படுவான் தெரியுமா? இவ் வருஷம் என் ஊரில் அதிகமாக வரகு விளைந்தது. அதனால் வரகு வைக்கோல் போர் போராய் விழுந்து கிடக்கிறது. அதை வேண்டுமானால் எடுத்துப் போகச்சொல். கத்தி முனையில் கப்பம் தருகிறேன், வாங்கிப் போகச்சொல்" என்று கடுமையாகச் சொன்னான்.



தோன்றமல்லன் தேசிங்கின் கடுமையான மொழி கேட்டுப் பயந்துவிட்டான். தன்னைச் சும்மாவிட்டாற் போதும் என்ற திகிலுடன் அவ்வூரை விட்டு ஆற்காட்டிற்கு ஓடிவந்தான். நவாப்பினிடம் தேசிங்கின் ஆணவத்தைச்

சொன்னான். நவாப்புக்கு அதிக கோபம் பிறந்து விட்டது.

நவாப்பு தன் அதிகாரத்தில் இருந்த சிற்றரசர்கள், பாளையக்காரர்கள் முதலியவர்களுக்கு உடனே செய்தி சொல்லியனுப்பினான். அவர்களையெல்லாம் பெரும்படையாகத் திரட்டிச் சண்டைசெய்யச் செஞ்சிக்குக் கிளம்பிவிட்டான். அப் பெருஞ்சேனை செஞ்சிக்கு அருகில் வந்து இறங்கியது.

தேசிங்கு இதையறிந்தான். தன் மகம்மதிய நண்பன் மௌத்துக்காரனை உடனே வரும்படி ஆள் அனுப்பினான். அப்பொழுது அவன் கலியாணஞ் செய்துகொள்ளப் பந்தலிலே மணையில் உட்கார்ந்திருந்தான். தேசிங்கின் செய்தி அறிந்ததும், நீலவேணி யென்னும் குதிரைமீது ஏறி வந்துவிட்டான். தேசிங்கு போருக்குச் செல்வதாகத் தனது ராணிக்குச் சொன்னான். அவள் "இன்றிருந்து நாளை போங்கள்" என்று சொன்னாள். அவன் அதைக் கேட்கவில்லை. ஸ்ரீரங்கநாதர் கோவிலுக்குள் அவன் சென்றான். சுவாமியும் வரம் கொடுக்கவில்லை. சகுனங்களும் சரியாக இல்லை. ஒன்றையும் அவன் சட்டை பண்ணாமல் தன் நண்பனுடன் நவாப்பின் சேனைக்குள் சண்டையிட நுழைந்துவிட்டான்.

இருவரும் பட்டாக் கத்தியைச் சுழற்றிப் பாளையக்காரரில் அநேகரை மடித்துவிட்டார்கள். நவாப்பின் பெரும்படைகள் அவர்களால் படுகளமாய்விட்டன. நவாப்பு இதை யறிந்து மௌத்துக்காரனைத் தந்திரமாகக் கொன்று விட்டான். அவன் இறந்த செய்தி தேசிங்கிக்கு

எட்டியது. உடனே அவன், "என் நண்பன் இறந்து, நானிருப்பதா!" என்று, மார்பில் வாளை வீசி, அங்கேயே இறந்துவிட்டான்.

தேசிங்கு, நவாப்புக்கு விரோதியானாலும் போரில் சுத்த வீரனாக விளங்கியதற்கு நவாப்பு அவனைப் பாராட்டினான். சுத்தவீரர்கள் ஒருவருக்கும் அடங்கி நடக்கமாட்டார்கள்.

குறிப்புரை :

குன்றுகள்=சிறு மலைகள்; விசித்திரமாகவும்=விநோதமாகவும்; எத்துணைப் பலாட்டியனோ=எவ்வளவு பலசாலியோ; வருடந்தோறும் = ஒவ்வொரு வருடமும்; கப்பம்=வரி; வல்லமைக்கு=பலத்துக்கு; தாழ்ந்தவன் = குறைந்தவன்; கடுமையாகச் சொன்னான்=கோபமாகச் சொன்னான்; மொழி=வார்த்தை; ஆணவத்தை=கர்வத்தை; பெரும்படைகள்=பெரிய சேனைகள்.

வினாக்கள் :

1. தேசிங்கு எந்தக் கோட்டையை ஆண்டுவந்தான்? அது எங்கு இருக்கிறது? அது எப்படிப்பட்டது?
2. தேசிங்கு, நவாப்புக்குக் கப்பம் கட்டுவதை என் நிறுத்தி விட்டான்?
3. தேசிங்கு, தோன்றமல்லன் கப்பம் கேட்க வந்தபோது சொன்ன பதில் என்ன?
4. தேசிங்கு எவ்வாறு சண்டைசெய்தான்? அதன் முடிவென்ன?

---

12. மேகமும் மழையும்

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் ஜலத்தை ஊற்றி வெயிலில் வைத்தால், அதிலுள்ள நீர் சிறிது சிறிதாகக் குறைந்து கடைசியில் ஒரு துளியுமின்றி முழுவதும் வற்றிப் போகிறது.

அதற்குக் காரணம் என்ன? பாத்திரத்திலுள்ள நீர் சூரிய வெப்பத்தினுல் ஆவியாக மாறி சாதாரண வாயுவுடன் கலந்துவிடுகிறது. இங்ஙனமே குட்டை, குளம், நதி சமுத்திரம் முதலிய நீர் நிலைகளிலுள்ள ஜலமும் சூரிய உஷ்ணத்தால் ஆவியாக மாறி ஆகாயத்தில் கலக்கிறது.

நீராவி அதி நுட்பமாயிருப்பதால், அது கண்ணுக்குத் தோன்றுவதில்லை. ஆனுல் அதன்மேல் குளிர்ந்த காற்றுப்பட்டால், அது கண்ணுக்குத்தோன்றும் உருவத்தை யடைகிறது. அப்போது அதை மேகம் என்று சொல்வார்கள். மேகம் வாயுவைவிட இலேசாக இருப்பதால் அது ஆகாயத்தில் மிதக்கிறது. மழைக்காலத்தில் ஆகாயத்தை அண்ணுந்து பார்த்தால் மேகம் திரண்டிருப்பதைக் காணலாம்.

மேகம் எப்படி மழையாகப் பொழிகின்ற தென்பது உங்களுக்குத்தெரியுமா? அடுப்பின்மேல் உள்ள உலைப்பானையின்மேல் ஒரு சட்டியை மூடித் திறந்தால், சட்டியின் அடிப்பாகத்தில் இருந்து நீர் துளித்துளியாகச் சொட்டுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அப்படி நீர்த்துளி சொட்டுவதற்குக் காரணம் என்ன? உலைப் பானையிலுள்ள தண்ணீர் தீயின் உஷ்ணத்தால் ஆவியாக மாறி பானையின்மேல் மூடியிருக்கும் சட்டியின் அடிப்பாகத்தில் படிகிறது. அந்தச் சட்டியை வெளியே எடுத்தால் அதன்மீதுள்ள நீராவி, குளிர்காற்றுப் பட்டதும் ஜலமாக மாறித் துளித்துளியாகச் சொட்டுகிறது. அதைப்போல் தான் மேகத்தின்மீதும் குளிர்ந்த காற்று வீசினுல்,

ஜலமாக மாறுகிறது. அந்த ஜலம் ஆகாயத்தை விட கனமாயிருப்பதால் பூமியின்மேல் அது துளித்துளியாய் விழுகிறது. அதைத்தான் நாம் மழை என்று சொல்லுகிறோம்.

மழை உயர்ந்த மலைகளுள்ள இடங்களிலும், காடு அடர்ந்த பிரதேசங்களிலும் விசேஷமாகப் பொழிகிறது. அதற்குக் காரணம், உயரப் போகப்போக மலைப்பிரதேசங்களில் எப்போதும் குளிர்ச்சியாயிருப்பதும், காடுகளில் குளிர்ந்த காற்று வீசுவதுமேயாகும். அதனால் பூமியின் மேல் மழை எங்கும் ஒரே சீராகப் பெய்யாமல், சமுத்திரக்கரை யடுத்துள்ள மலைநாடுகளில் அதிக மழையும், சமுத்திரத்திற்கு அதிக தூரமுள்ள சமவெளிகளில் குறைந்த மழையும் பெய்கிறது.

பூமியில் பெய்கிற மழை நீரினால் குளம் குட்டைகளும் ஏரிகளும் நிரம்புகின்றன. ஓடைகளும் ஆறுகளும் வெள்ளப் பெருக்கு எடுத்தோடிச் சமுத்திரத்தில் விழுகின்றன. அவ் வெள்ள நீரில் ஒரு பாகம் வீணாகாதபடி அரசாங்கத்தார் இப்போது ஆறுகளில் அணைகள் கட்டிக் கால்வாய்மூலம் ஜலத்தை வயல்களுக்குத் திருப்புகிறார்கள். விவசாயிகள் கால்வாய் ஜலத்தை வயல்களுக்குப் பாய்ச்சிப் பயிர் செய்கிறார்கள். மழைநீரில் ஒரு பாகம் இவ்வித மாகவும், மற்றோர் பாகம் பூமிக்குள் ஊறி, குளம் கிணறுகளிலும் நிரம்புகின்றன. மழை இல்லாத காலங்களில், நாம் பூமியிலுள்ள ஊற்றின் மூலமாக ஜலத்தைப் பெறலாம்.

மழை உலகத்திற்கு மிக முக்கியமானது. மழையினால்தான் எல்லா ஜீவராசிகளும், மரம்,

செடி கொடிகளும் பிழைத்திருக்கின்றன. மழை இல்லாவிட்டால் ஜீவராசிகளும் பிழைத்திரா. புல் பூண்டுகளும் முளையா. இதை நோக்கியே நமது தமிழ் நாட்டில்

மாரியல்லது காரியம் இல்லை,
வானம் சுருங்கில் தானம் சுருங்கும்,

என்னும் பழமொழிகள் வழங்குகின்றன.

குறிப்புரை :

திரண்டிருப்பதை = ஒன்று சேர்ந்திருப்பதை; சொட்டுவதை = ஒழுகுவதை; ஒரே சீராக = ஒரே அளவாக; விவசாயிகள் = பயிர் செய்வோர்; மாரி = மழை; வானம் = மழை; சுருங்கும் = குறையும்.

வினுக்கள் :

1. நீராவி எப்படி உண்டாகிறது ?
2. நீராவி எப்போது கண்ணுக்குத் தெரிகிறது ?
3. மேகம் ஜலமாக மாறுவதற்குக் காரணமென்ன ?
4. மழை எங்கு அதிகமாகப் பெய்கிறது ? காரணம் என்ன ?
5. மழை ஜலம் நமக்கு எவ்வாறு உபயோகம் ஆகிறது ?
6. நமது தமிழ் நாட்டில் மழையைக் குறித்து வழங்கும் பழமொழிகள் யாவை ?

---

13. சுகாதார விதிகள்

காற்று	நீர்
காற்றுள இடத்திரு.	சுத்த நீர் பருகு.
நற்காற்று உட்கொள்.	அசுத்த நீர் பருகேல்.
வாய்வழி உயிரேல்.	தண்ணீரில் துப்பேல்.
முகமூடித் தூங்கேல்.	நீர் சுருக்கி உண்.
சூரிய ஒளி அவசியம்.	நிர்மல நீரெடு.

நீர்

காய்ச்சின பாற்குடி.
சனி நீராடு.

உணவு

பசித்துப் புசி.
மீதூண் விரும்பேல்.
நன்றாக மென்றுண்.
தந்தம் விளக்கியுண்.
கைகால் கழுவியுண்.
தோய்த்துக்குளித்துண்

உடை

தோய்த்து உடுத்து.
இறுக்கிக் கட்டாதே.

மலஜலம் கழித்தல்

மலஜலம் தொலைகழி.
மலமூத்திரம்
அடக்கேல்.

தேகாப்பியாசம்

வியர்க்க விளையாடு.
மாலை உலாவு.

வியாதிக்கு இடம்

ஈயிடம் நோயிடம்.
ஈ, பேன் நோய்வழி.
கொசுவை அகற்று.
அழுக்கே நோய்க்கிடம்.
நகக்கண் அழுக்கெடு.
எச்சில் உண்ணேல்.
கண்டவிடந் துப்பேல்.
எலிக்கிடங் கொடேல்.
நோய்க்கிடங்கொடேல்.

அவசியம்

அம்மைக் குத்தல்
அவசியம்.
தொற்றுநோய் அகற்று.

குறிப்புரை :

உயிரேல்=சுவாசிக்காதே; பருகு=குடி; துப்பேல்=எச்சில் உமிழாதே; நிர்மல=பரிசுத்தமான; மீதூண்=அளவுக்கு மிஞ்சிய ஆகாரம்; தந்தம்=பல்; தொலை = தூரத்தில்; ஈயிடம்=ஈக்கள் இருக்கும் இடம்.

வினாக்கள் :

1. காற்றைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதென்ன ?
2. நாம் பருகும் நீர் எப்படி யிருக்கவேண்டும் ?
3. உணவு கொள்வதில் நாம் கவனிக்கவேண்டிய விதிகள் எவை?
4. வியாதி வருவதற்குக் காரணங்கள் என்ன ?

14. நல்ல சிநேகிதர்

முன்னொரு காலத்தில் குசேலர் என்று ஒரு பிராமணர் இருந்தார். அவர் மிகவும் ஏழை. அவருக்குச் சுசீலை என்னும் ஒரு நல்ல மனைவி இருந்தாள். அவள் வயிற்றில் இருபத்தேழு குழந்தைகள் பிறந்தன. ஏழைக் குடும்பத்தில் அதிகமான குழந்தைகள் பிறந்துவிட்டதால், சாப்பாட்டிற்கு அதிகம் கஷ்டமாய் விட்டது.

குசேலர், தினந்தோறும் காட்டில் விளையும் புல்லரிசியைத் தேடிக் கொண்டுவந்து கொடுப்பர். அவர் மனைவி அதைப் பெற்றுக் கூழாக்குவாள். அவ்வுணவிலும் விருந்தாளிக்கு ஒரு பங்கு எடுத்துவைப்பாள். மீதியுள்ள உணவையே எல்லாக் குழந்தைகளுக்கும் பகிர்வாள். குழந்தைகள் கூழ் இன்றி ஓர் உருசியுள்ள உணவையும் கண்டில. அவைகள் கூழும் வயிறாரக் கிடைக்காமல் சில வேளைகளில் கண் பிசைந்து அழும்.

ஒரு நாள் குழந்தைகள் அழுவதைச் சகிக்காமல் சுசீலை கணவனை நோக்கினாள். குசேலர் அவள் முகக்குறிப்பு அறிந்து "என்னிடம் ஏதாவது சொல்லவேண்டுமோ!" என்று கேட்டார்.

சுசீலை :—ஆம் உண்டு. அது குழந்தைகளைப்பற்றியதே. நமது குழந்தைகள் உண்ண உணவு இல்லாமல் அழுவதைக் காண என் மனம் வருந்துகிறது. இதை எத்தனை நாள் சகிப்பது? தங்கள் பள்ளிக்கூடச்சகபாடி கிருஷ்ண பகவான் ராஜாவாக இருக்கின்றார் என்று சொல்லி யிருக்கின்றீர்கள். அவரைப் பார்த்து ஏதாவது உதவி பெற்றுவரக் கூடாதா?

குசேலர் :—நான் மிகவும் ஏழை அல்லவா ? ராஜாவாக இருப்பவரை எப்படிக் காண்பேன் ? அரையில் பட்டு உடை இல்லை. பீதாம்பர உத்தரீயம் இல்லை. கடுக்கன், மோதிரங்கள், இல்லை. கந்தைத் துணியுடனிருக்கும் என்னை ராஜ சபையில் எங்ஙனம் சேர்ப்பார்கள் ?

சுசீலை :—சிநேகிதர்கள், தங்கள் நண்பனின் ஆடை அணிகளைக் கவனியார்கள். குபேரனாக இருந்தாலும்,கோவண ஆண்டியாகவாழ்ந்தாலும் நண்பனை அன்பாகவே வரவேற்பார்கள். கிருஷ்ணபகவான் உத்தமகுணம் உள்ளவர் என்று தாங்கள் சொல்லுகின்றீர்கள். அப்படி யிருக்க அவரைச் சந்தேகிக்கலாமா ?

குசேலர்:—கிருஷ்ணபகவான் நல்லவர்தான். ஆனால் சிநேகிதரிடத்திற்கும், கோயிலுக்கும், கர்ப்பிணிகள் இருக்கும் வீட்டிற்கும் செல்லும் பொழுது வெறுங் கையுடன் செல்லக் கூடாது என்பது வழக்கமாயிற்றே. அதற்கு நான் என்ன செய்வேன் ?

சுசீலை, தினந்தோறும் குசேலர் கொடுத்த புல்லரிசியில் சிறிது மிகுத்துவைத்திருந்தாள். அதைப் பக்குவப்படுத்தி, அவல் இடித்து ஒரு கந்தைத் துணியில் முடிந்து குசேலரிடம் கொடுத்தாள். குசேலர் அதைப் பெற்றுக்கொண்டு நெடுந்தூரத்திலுள்ள துவாரகைக்கு நடந்து சென்றார்.

குசேலர் சில நாட்களுக்குப் பிறகு துவாரகை அடைந்தார். அங்கே அழகாயிருந்த கிருஷ்ண பகவானுடைய அரண்மனையை நெருங்கினார். வாயில் காப்போர் இவ்வேழையை அரண்மனையில்

விட மறுத்துவிட்டனர். குசேலர் தன் வருகையை மட்டும் கிருஷ்ணபகவானுக்குத் தெரிவிக்கும்படி வேண்டிக்கொண்டார். அவர்கள் மனம் இறங்கித் தங்கள் ராஜாவுக்குக் குசேலர் வரவைத் தெரிவித்தார்கள்.

அதைக் கேட்டவுடன் கிருஷ்ணபகவான் பசுவைத் தேடியோடும் கன்றுபோல வாசலுக்கு

ஓடி வந்தார். குசேலரைக் கட்டித் தழுவி, "வருக! என் அன்பா, என்னைப் பார்க்க இத்தனை நாளாயிற்று!" என்று அன்பான வார்த்தைகள் கூறி அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார். பனி நீரால் நீராட்டினார். பட்டு ஆடைகளால் அலங்கரித்தார். பின் பண்டு பலாதிகளை ஊட்டி அவருடைய களைப்பை ஆற்றினார். இவ்வுபசாரங்கள் எல்லாம் முடிந்த பிறகு கிருஷ்ணபகவான் குசேலரை நோக்கி, "எனக்குத் தின்பதற்கு என்ன தின்பண்டம் கொண்டுவந்தீர்!" என்று கேட்டார்.

குசேலர் கந்தைத்துணியிலிருந்த அவலை எடுத்துக் கொடுப்பதற்கு வெட்கப்பட்டார். ஆனால் கிருஷ்ணபகவான் அதைத் தானே அவிழ்த்து அவலை எடுத்துப் பிரியமாய்

உண்டார். பின்பு அவர் பலநாள் குசேலரை உபசரித்து அரண்மனையிலேயே வைத்திருந்தார்.

கிருஷ்ணபகவான் செய்த உபசாரத்தினால், தான் கேட்க வந்ததையும் குசேலர் மறந்துவிட்டார். ஒரு நாள் விடைபெற்றுக்கொண்டு தன் ஊருக்குப் புறப்பட்டார்.

பெரியோர்கள் சொல்லாமலே பிறருக்கு உதவி செய்வார்கள் அல்லவா! கிருஷ்ணன் குசேலர் வீடுபோய்ச் சேருவதற்குள்ளாகவே அவருடைய வீட்டிற்கு ஏராளமான பொருள்களை அனுப்பினார். அதனால் குசேலர் வறுமையின்றி வாழ்ந்தார்.

ஒருவருக்கு நல்ல சிநேகிதர் இருப்பது நல்லது.

குறிப்புரை :

அவ்வுணவிலும்=அந்த ஆகாரத்திலும்; பகிர்வாள்=பங்கிடுவாள்; முகக்குறிப்பு=முகத்திலுண்டாகும் மாறுதல்; சகபாடி=உடன் வாசிப்பவன்; அரையில்=இடுப்பில்; பீதாம்பர உத்தரீயம்=பொற்சரிகையிட்ட மேல் வேட்டி; வறுமை=தரித்திரம்.

வினாக்கள் :

1. குசேலரின் மனைவி பெயர் என்ன? அவருக்கு எத்தனை குழந்தைகள் இருந்தன?
2. சுசீலை குசேலரிடம் என்ன வேண்டினாள்?
3. யார் யார் உள்ள வீட்டிற்கு வெறுங்கையுடன் செல்லுதல் கூடாது?
4. துவாரகைக்குக் குசேலர் என்ன தின்பண்டம் கையிற்கொண்டு சென்றார்?
5. கிருஷ்ணன் குசேலரை எவ்வாறு உபசரித்தார்?
6. பெரியோர்கள் சொல்லாமலே உதவி செய்வார்கள் என்பது இக்கதையால் எவ்வாறு ருசுப்படுத்தப்பட்டுள்ளது?

15. புத்தர் பெருமான்

இருபத்தைந்து நூற்றுண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் உத்தரகோசலம் எனும் நாடு ஒன்று இருந்தது. அந் நாட்டைச் சுத்தோதனர் என்பவர் கபிலவாஸ்து என்ற நகரிலிருந்து அரசாண்டுவந்தார். அவருக்கு மாயாதேவி என்ற மனைவி இருந்தாள். அவள் ஒருநாள், புத்தி, வித்தைகளில் வல்லவனும், மிக்க அழகனும் ஒரு புத்திரன் தனக்குப் பிறக்கப்போவதாகக் கனவு கண்டாள்.

அதன்படியே மாயாதேவி கருப்பமுற்றுக் கோடிசூரியப்பிரகாசம்போன்ற ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அப்போது நாட்டில் சுப சகுனங்கள் தோன்றின. அவை கண்டு மக்கள் மகிழ்ந்தனர். சுத்தோதனர் நெடுநாள் புத்திர பாக்கியம் இல்லாதிருந்து, இப்போது உண்டானதற்கு மிகக் களிப்படைந்தார். அந்த

அரிய மைந்தருக்குச் சித்தார்த்தன் எனப் பெயர் இட்டார்.

சித்தார்த்தர் இளமையிலேயே எல்லாக் கலைகளையுங் கற்ருர். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி அவர் கருணை, சாந்தம் முதலிய நற்குணங்களைப் பெற்றிருந்தார். ஒரு சிறு பிராணி வருந்துவதையும் அவர் கண்டு சகியார். அதனுல் சுத்தோதனர் வெளியிலுள்ள ஒரு துன்பமும் அவர் கண்ணில் படாமலிருக்கப் பெரிய மாளிகை கட்டி அதில் வசிக்கச் செய்தார்.

சித்தார்த்தர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, விவாகத்திற்குரிய பருவத்தை யடைந்தார். அரசர் அவருக்கு மிக்க அழகுள்ள யசோதை என்னும் பெண்ணைக் கலியாணஞ் செய்துவைத்தார். அவர் மனைவியுடன் இன்பமாக இல்லற தருமத்தை நடத்திவந்தார். அப்போது அவருக்கு இராகுலன் என்ற ஒரு குழந்தை பிறந்தது. அதனுல் அவருக்குக் குடும்ப விசாரம் உண்டாயிற்று.

பிறகு ஒருநாள் சித்தார்த்தர் வீதி உலாவச் சென்ருர். சென்றவர் வழியில் ஒரு கிழவனைக் கண்டார். சிறிதுதூரஞ் சென்றபின் ஒரு நோயாளியைச் சந்தித்தார். அதற்கப்பால் ஒரு பிணத்தைப் பார்த்தார். இவைகளைக் கண்டதும் அவர் அரண்மனைக்குச் சென்று, ஆழ்ந்த சிந்தனை கொண்டார். "நாமும் மூப்பு, பிணி, இறப்பு என்னும் துன்பங்களுக்கு ஆளாக வேண்டியது இல்லையா? நாம் மனிதனுகப் பிறந்து உலகிற்கு என்ன நன்மை செய்தோம். இனி இங்ஙனம் வீணே காலத்தைக் கழிக்கக்கூடாது. துறவறம்

கொள்ளுதலே சிறந்தது" என முடிவு செய்தார்.

ஒருநாள் இரவு அரண்மனையில் எல்லாரும் உறங்கிக்கொண்டிருந்தனர். அப்போது அவர் தம் இள மனைவியையும், சிறிய குழந்தையையும் ஒருமுறை பார்த்துவிட்டு, யாரும் அறியாமல் காட்டிற்குச் சென்றார். அங்கே அரசர்க்குரிய ஆடை, அணிகளை நீக்கி, துறவியாகி, பசிதாகம் பாராமல் ஆறுவருஷ காலம் தவஞ்செய்தார்.

அத்தவத்தால் அவருடைய உடல் மெலிந்ததேயன்றி, அவருக்கு அப்போது உண்மையான ஞானம் உண்டாகவில்லை. அதனால் அவர் நாட்டினுள் புகுந்தார். கயை என்னும் தலத்திற்குச் சென்றார். அங்கே ஒரு போதி மரத்தடியில் கிழக்கு முகமாயமர்ந்து ஊண் உறக்கம் இன்றி, இரவு பகலாய் உண்மை ஞானத்தை ஆராய்வதிலேயே நாட்டமாக இருந்தார்.

இங்ஙனமிருக்கும்போது இருபத்தொன்பதாம் நாள் அவருக்கு ஞானோதயமாயிற்று. அந்த ஞானத்தில் "மானிடப்பிறவி துக்கமுடையது. துக்க நிவர்த்திக்கு ஜீவகாருணியமே சிறந்த வழியாகும். பேராசையைத் தவிர்க்கவேண்டும். எல்லா ஜீவன்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்" என்னும் உண்மைகள் புலப்பட்டன.

அன்றுமுதல் அவர் எல்லா மக்களிடத்தும் தாம் கண்ட உண்மைகளைப் போதித்துவந்தார். அப்போது அவருக்குப் புத்தர் என்று பெயர் உண்டாயிற்று. அவர் கொள்கைகளை அரசர் முதல் யாவரும் பின் பற்றினர். அது முதல் உலகத்தில் புத்தமதம் எங்கும் பரவியது. புத்தர்

பெருமான் இந்த உண்மைகளைப் போதித்து எண்பதாவது வயதில் குசி நகரத்தில் சித்தி யடைந்தார்.

குறிப்புரை :

சுப சகுனங்கள் = நல்ல குறிகள்; மகிழ்ந்தனர் = சந்தோஷித்தனர்; புத்திரபாக்கியம் = பிள்ளையை அடையும் அதிர்ஷ்டம்; எல்லாக் கலைகளையும் = எல்லா வித்தைகளையும்; கருணை = அன்பு, இரக்கம், தயை; சகியார் = பொறுக்கமாட்டார்; பருவத்தை = வயதை; சிந்தனை = யோசனை; அணிகளை = நகைகளை.

வினுக்கள் :

1. புத்தருடைய தாய் தந்தையர் யாவர்? அவர் பிள்ளையின் பெயர் யாது?
2. புத்தர் துறவறங் கொள்ளக் காரணம் என்ன ?
3. புத்தருக்கு ஞானோதயம் எப்போது, எங்கு உண்டாயிற்று? அந்த ஞானத்தால் அவர் அறிந்த உண்மைகள் யாவை?
4. புத்தர், மக்களுக்குச் செய்த நன்மைகள் எவை ?

---

16. சுதேச கீதம்

நமது நாடு

1. தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

2. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—
அதைத் தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த இந்துஸ்தானம்—
அதைத் தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

3. வடக்கில் இமயமலே பாப்பா—தெற்கில்
வாழுங் குமரிமுனே பாப்பா
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

4. வேதமுடைய திந்த நாடு—நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு
சேத மில்லாத இந்துஸ்தானம்—இதைத்
தெய்வ மென்று கும்பிடடி பாப்பா.



17. பத்மினி

நமது தேசத்திற்குத் தலே நகராய் விளங்குவது டில்லி. அதைச் சுமார் நூறு வருஷங்களுக்கு முன் அலாவுதீன் என்ற மகம்மதிய மன்னன் ஆண்டுவந்தான்.

அக்காலத்தில் பீமசிங் என்பவன் மீவார் இராஜ்யத்திற்கு அரசனுயிருந்தான். அவனுக்கு அழகில் இலக்ஷ்மியையும், புத்தியில் சரஸ்வதியையும் ஒத்த பத்மினி என்பவள் மனைவியாக வாய்த்திருந்தாள். பீமசிங் அவளுடன் சித்தூர் என்னும் தலைநகரிலிருந்து கொண்டு நீதி தவருமல் அரசாட்சி செய்து வந்தான். அவன் ஆட்சிக்குப் பத்மினி நல்ல துணையாயிருந்தாள்.

அலாவுதீன், பத்மினியின் அழகையும் குணத்தையுங் கேட்டு, அவளை மணம்புரிய விரும்பிச் சித்தூரை முற்றுகையிட்டான். ஒன்றரை வருஷ காலம் பீமசிங்கோடு அவன் கொடிய யுத்தம் புரிந்தான். இருபக்கத்திலும் அநேக வீரர்கள் இறந்தார்கள். கடைசியில் இருவரும் சமாதானம் பேசினர்கள். அப்போது அலாவுதீன் பத்மினியைக் கண்ணுடியிலாவது காட்டவேண்டுமென்று, பீமசிங்கைக் கேட்டுக் கொண்டான். பீமசிங், குடிகளின் க்ஷேமத்தின் பொருட்டு அதற்கு இசைந்தான்.

அலாவுதீன் பீமசிங்கின் அரண்மனைக்கு வந்தான். அவனுக்கு அரசன் பத்மினியைக் கண்ணுடியின் மூலம் காட்டினன். அவன் அவளுடைய அழகைக் கண்டு களித்தான். 'இவளை நாம் எப்படி அடைவது?' என்று அப்போது கபட எண்ணமுங் கொண்டான். மேலுக்கு அன்புள்ளவன் போல நடித்து, "பீமசிங் உன்னுடைய நட்பை இனி மறவேன்" என்று உபசார வார்த்தை கூறினன். கள்ளங் கபடமறியாத பீமசிங் அதை நம்பினன்.

பீமசிங் மரியாதைக்காக அலாவுதீன் கூடாரத்திற்குச் செல்லவேண்டுமென்று ஏற்பாடு ஆயிற்று. துணைவர் அதிகமின்றிப் பீமசிங் அலாவுதீன் கூடாரத்தை நோக்கிச் சென்றான். கூடாரத்தை நெருங்கியதும், பதுங்கியிருந்த மகம்மதிய வீரர்கள் அவன் மேல் பாய்ந்து அவனைப் பிடித்து அலாவுதீனிடம் கொண்டு போனார்கள். அலாவுதீன் அவனைச் சிறையில் அடைக்க உத்திரவிட்டான்.

பின்பு அலாவுதீன், பத்மினி தன்னிடம் சேர்ந்துவிட்டால் பீமசிங்கை விடுதலை செய்வதாக அவளுக்குக் கடிதம் எழுதினான். அக்கடிதத்தைக் கண்டு அவள் வருத்தமுங் கோபமுங் கொண்டாள். எப்படியாவது கணவனை மீட்கவேண்டுமென்று யோசித்தாள். அப்போது அவளுக்கு ஒரு நல்ல யுக்தி பிறந்தது. ஒரு கடிதத்தை எடுத்து, "எனக்குத் தோழியர் பலர் இருக்கின்றனர். அவர்கள் என்றும் என்னைவிட்டுப் பிரியாதவர்கள். அவர்கள் என்னோடு பல்லக்குகளில் ஏறி ஆங்கு வருவார்கள். அவர்களை உங்கள் வீரர்கள் சோதிக்கக்கூடாது. அதற்கு விருப்பமானால் நான் தங்களைப் பார்க்கிறேன்" என்று பதில் எழுதினாள். அலாவுதீனும் அதற்குச் சம்மதித்தான்.

உடனே பத்மினி, எழுநூறு வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் "சூது செய்த அலாவுதீனைச் சூதாலேயே வெல்லவேண்டும். நீங்கள் எனது தோழியர்களைப்போலப் பெண் வேடம் தரித்துப் பல்லக்கில் ஏறி என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்" என்று சொன்னாள். அவர்களும் அங்ஙனமே ஆயத்தமானார்கள்.

பத்மினி பல்லக்கில் ஏறி, எழு நூறு பல்லக்குகளுடன் அலாவுதீனிடஞ் சென்ருள். சென்றவள், அலாவுதீனைக் கண்டு, "அரசனே! நான் இனி உன்னிடமே இருக்கப்போகிறேன். கடைசி முறையாக எனது நாயகரிடம் சிறிது நேரம் பேச எனக்கு அனுமதி தரவேண்டும்" என்று வேண்டினுள். அலாவுதீன் சந்தோஷமாக அதற்கு இணங்கினுன்.

பத்மினி சிறைக்குச்சென்று பீமசிங்கைக் கண்டு பேசிக்கொண்டிருந்தாள். சிறிதுநேரத்திற் கெல்லாம் அவர்கள் இருவரும் சிறையினின்றும் தப்பித்துக் கொண்டார்கள். இதை யறிந்ததும் அலாவுதீன், "பத்மினியின் தோழியரைச் சிறை பிடியுங்கள்" என்று தன் வீரர்களுக்குக் கட்டளை யிட்டான். தோழியர் பெண்களா? அவர்கள் சுத்த இராஜபுத்திர வீரர்களாயிற்றே. உடனே அவர்கள் தங்கள் வேடத்தைக் கலேத்து, அவ் வீரர்களோடு கடுஞ்சண்டை யிட்டனர். அச் சண்டையில், மகம்மதிய வீரர்கள் பலர் இறந்து போயினர்.

பத்மினி தன்னை உபாயத்தால் வென்றதற்கு அலாவுதீன் மிகவும் வெட்க மடைந்தான். சேனையிலும் பலர் மடிந்துவிட்டதால், அவன் யுத்தம்செய்ய முடியாமல் ஏமாற்றத்துடன் டில்லி போய்ச் சேர்ந்தான். ஆனல் அவன் பத்மினியை மாத்திரம் மறக்கவில்லை. மீண்டும் பீமசிங்கை வென்று, பத்மினியை அடைய, படையைப் பலப்படுத்தினுன்.

இடையில் பதின்மூன்று வருஷங்கள் கழிந்தன. அதற்குமேல் அலாவுதீன் பெருஞ்

சேனையைத் திரட்டிக்கொண்டு பீமசிங்கின்மேல் போர் தொடுத்தான். அப்போரில் பீமசிங்கும் அவனுடைய குமாரர்களும் இறந்தார்கள். பத்மினி கோட்டையில் திக்கற்றவளானாள். கணவன் இறந்து, தான் இருப்பதாவென்று, அந்த உத்தமி அக்கினியில் குதித்து உயிர் விட்டாள். அவள் உயிர் நீங்கினாலும், அவளுடைய கீர்த்தி அழியாமல் இருக்கிறதல்லவா ? அவளல்லவோ வீரலக்ஷ்மி !

குறிப்புரை :

நீதி = நியாயம் ; முற்றுகையிட்டான் = கோட்டையைத் தனது வீரர்களோடு வளைத்துக்கொண்டான் ; க்ஷேமத்தின்பொருட்டு = சுகத்தின்பொருட்டு ; இசைந்தான் = உடன்பட்டான், ஒத்துக் கொண்டான் ; களித்தான் = சந்தோஷித்தான் ; நட்பை = சிநேகத்தை ; உபசார வார்த்தை = மரியாதை வார்த்தை ; யுக்தி = யோசனை ; அனுமதி = உத்தரவு ; இணங்கினன் = ஒப்புக் கொண்டான்.

வினாக்கள் :

1. பத்மினி யார் ? அவளைப்பற்றிய விவரங்கள் என்ன ?
2. அலாவுதீன் சித்தூரை என் முற்றுகையிட்டான் ?
3. முற்றுகை எவ்வாறு முடிந்தது ?
4. பீமசிங் எப்படிச் சிறைப்பட்டான் ?
5. பத்மினி தன் கணவனைச் சிறையிலிருந்து எவ்வாறு மீட்டாள்?

18. விறகுவெட்டியும் தங்கக்கோடரியும்

ஒரு நாள் ஆற்றங்கரையோரத்தில், ஒருவன் மரம் வெட்டிக் கொண்டிருந்தான். அவனது கோடரி கை தவறி ஆற்றில் விழுந்து விட்டது. தண்ணீரில் இறங்கித் தேட அவனுக்கு நீந்தத் தெரியாது. அதனால் அவன் கையை விரித்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். அவன் பரம ஏழை. அன்றாடம் விறகு வெட்டித்தான் அவன் மனைவி மக்களைக் காப்பாற்றவேண்டும். அத்தொழில் தவிர அவனுக்கு வேறு ஒன்றுஞ் செய்யத் தெரியாது. கள்ளங் கபடு அறியாதவன். என் செய்வான் பாவம்! "என் பிழைப்புக்கு ஆதாரமாயிருந்த நல்ல கோடரி போய்விட்டதே. இனி எப்படிப் பிழைப்பேன்?" என்று சொல்லி அழுதுகொண்டு இருந்தான்.

அவன் நிலைமை பரிதாபகரமா யிருந்தது. அப்பொழுது ஒருதெய்வம் அவன் முன்தோன்றி "உன் கோடரியை நான் தேடித் தருகின்றேன்" என்று சொல்லி ஆற்றில் முழுகியது. அது ஒரு

தங்கக் கோடரியைக் கொண்டுவந்து, "இது உன்னுடையதா, பார்" என்றது. அவன், "அது என்னுடையது அல்ல" என்றான். மீண்டும் முழுகி ஒரு வெள்ளிக் கோடரியை எடுத்துவந்து கொடுத்து, "இதைப் பார்த்துச் சொல்" என்றது. "இதுவும் என்னுடையது அல்ல" என்று மறுத்தான். பிறகு அவனுடைய இரும்புக் கோடரியைக் கொண்டு வந்து காட்டியது. "அதுதான் என்னுடைய அரிய கோடரி" என்று சொன்னான்.

தெய்வம், விறகுவெட்டியின் உண்மைக் குணத்திற்கு மகிழ்ந்து, இரும்புக் கோடரியுடன் தங்கக் கோடரியையும், வெள்ளிக் கோடரியையும் அவனுக்குக் கொடுத்து மறைந்தது.

பிறகு அந்த விறகுவெட்டி, அவைகளை எடுத்துக்கொண்டு போய், அங்கு நடந்த அதிசயத்தை, ஊரி லிருந்தவர்களுக் கெல்லாம் சொன்னான். பக்கத்து வீட்டுக்காரன் ஒருவன் பொறாமையால் தானும் அவ்வாறு பெறலாம் என்று எண்ணிக் கோடரியை எடுத்துக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போனான். விறகு வெட்டுவதுபோல வெட்டிக் கோடரியை வேண்டுமென்றே ஆற்றில் கைநழுவ விட்டு விட்டான். அதற்காக அவன் அதிகம் கஷ்டப்படுவதுபோலப் பாசாங்கு அழுகை அழ ஆரம்பித்தான்.

ஏழை விறகு வெட்டிக்கு முன் தோன்றிய அந்தத் தெய்வம், ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டி "இது உன்னுடையது தானா?" என்றது. அவன், பொய்யாக "ஆம்.

அது என்னுடையதுதான்" என்று சொல்லி அதை வாங்கப்போனன். அப்பொழுது அத் தெய்வம், "நீ பொய்யன். அன்றியும் அதிகப் பொருமைக்காரன். உனக்கு உன்னுடைய கோடரியும் கிடைக்காது, போ" என்று கூறிச் சென்றது. பொருமையினுலும், பொய்யினுலும் கிடைத்த பலன் இதுதானு வென்று அவன் சொல்லிக்கொண்டு வீட்டை அடைந்து அன்றுமுதல் உண்மையாக உழைத்து வாழ்ந்தான்.

போய் பேசாதே ; பொருமை கொள்ளாதே.

குறிப்புரை :

பரம ஏழை=மிகவும் ஏழை; அன்ருடம்=தினமும்; கள்ளங் கபடு=சூது ; அரியகோடரி=அருமையாகிய கோடரி.

வினக்கள் :

1. விறகுவெட்டி ஏன் அழுதுகொண்டிருந்தான் ?
2. தெய்வம் அவனுக்கு ஏன் தங்கக் கோடரியையும், வெள்ளிக் கோடரியையும் கொடுத்தது ?
3. பொருமைக்காரனுக்குத் தெய்வம் எவ்வாறு புத்தி கற்பித்தது ?

19. உப்பு

உப்பு ஒரு முக்கியமான வஸ்து. நாம் உண்ணும் ஆகார பதார்த்தங்களில் எல்லாம் அது சேருகிறது. உப்பு சேராவிட்டால் உணவு ருசிப்பதில்லை. இதைக் குறித்தே நம் தமிழ் நாட்டில் உப்பில்லாப்பண்டம் குப்பையிலே என்று ஒரு பழமொழியும் வழங்கி வருகிறது.

உப்பில் பலவிதம் உண்டு. அவை கடலுப்பு, கல்லுப்பு, இந்துப்பு, முதலியன. இவற்றில் நாம் உபயோகிக்கும் உப்பு கடலுப்பாகும்.

கடலில் உப்பு நிறைந்திருக்கிறது. கடல் ஜலம், உப்பு உற்பத்திசெய்ய அதிகமாகப் பயன் படுகிறது. கடலோரங்களில் உப்பை உண்டாக்கும் இடங்கள் பல இருக்கின்றன. அங்கிருந்து கொண்டுவரும் உப்புதான் நமது கடைகளில் அதிகமாக விற்கப்படுகிறது.

உப்பு எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது? உப்புத் தொழிலாளர்கள் கடல் நீரை வாய்க்கால்கள் மூலம் கொண்டுவந்து தரையின்

மீது கட்டியிருக்கும் பாத்திகளில் பாய்ச்சுவார்கள். அவைகளில் - கடல்நீர் தேங்கி நிற்கும். சில தினங்களுக்குப்பின் பாத்திகளிலுள்ள கடல் ஜலம் சூரிய வெப்பத்தினுல் ஆவியாக மாறவே, அடியில் உப்பு கன பதார்த்தமாகத் தங்குகிறது. அதைத் தொழிலாளர்கள் பாத்திகளிலிருந்து சுரண்டிக் குவிப்பார்கள். இவ்விதம் உப்பு உற்பத்தி செய்யப்படும் இடத்திற்கு உப்பளம் என்று பெயர். நமது தென்னிந்தியாவில் கடற்கரையோரமாக இவ்வித உப்பளங்கள் பல இருக்கின்றன.

சுரங்கத்திலிருந்தும் உப்பு எடுக்கப்படுகிறது. உப்புச் சுரங்கங்கள் ஐரோப்பாக் கண்டத்தில் இருக்கின்றன. நமது தேசத்தில் பஞ்சாப் மாகாணத்தில் உப்புப் பாறைகள் அதிகமாக உண்டு. அவற்றை வெட்டிப் பொடியாக்கி உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்குக் கல்லுப்பு என்று பெயர்.

உப்பு பல பதார்த்தங்களில் சேருகின்றது. ஊறுகாய்கள் அழுகாமலும் புழுக்காமலும் இருப்பதற்கு உப்பைச் சேர்ப்பார்கள். மீன், மாமிசம் முதலியவைகளைப் புசிப்பவர்கள், அவைகளை உப்புக்கண்டம் போட்டுப் பல நாட்கள் கெடாமல் வைத்திருப்பார்கள். இன்னும் உப்பு, தென்னை முதலிய மரங்களுக்கு எருவாகவும் பயன்படுகிறது.

உப்பை உற்பத்தி செய்ய அதிகச் செலவு பிடிக்காது. ஒரு மணங்கு உப்புச் செய்ய ஒரு அணு ஒன்பது பை, அல்லது இரண்டணு செலவு பிடிக்கும். இவ்வளவு எளிதாகக்

கிடைக்கும் உப்புக்கு அரசாங்கத்தார் வரி போட்டிருக்கின்றார்கள். அதனால் தான் உப்பு, உற்பத்திச் செலவை விடப் பதின்மடங்கு உயர்ந்து விற்கிறது.

குறிப்புரை :

வஸ்து = பொருள்; பயன்படுகிறது = உபயோகப்படுகிறது; தேங்கி நிற்கும் = தங்கி நிற்கும்; வெப்பத்தினால் = சூட்டினால்; எளிதாக = சுலபமாக.

வினாக்கள் :

1. தமிழ்நாட்டில் உப்பைப்பற்றி வழங்கும் பழமொழி யாது? அப் பழமொழி வழங்கக் காரணமென்ன?
2. உப்பு எத்தனை வகைப்படும்? அவற்றில் நாம் உபயோகிப்பது எது?
3. உப்பு எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது?
4. கல்லுப்பு எங்கு கிடைக்கிறது? அது எப்படி உபயோகப்படுத்தப்படுகிறது?
5. உப்பின் உபயோகங்கள் எவை?

---

20. புத்தியில்லாத வேலைக்காரன்

ஆற்காடு என்னும் ஊரில் நவாப்பு என்னும் முகம்மதிய அரசன் ஒருவன் இருந்தான். அவனது அரசாங்கத்தில் மந்திரி பிரதானியர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இருந்தனர். அவர்களுக்கு நவாப்பு அதிகச் சம்பளம் கொடுத்து வந்தான். அதைக்கண்ட நவாப்பின் சேவகனுக்கு மனந்தாளவில்லை. தனக்கும் ஏன் அம்மாதிரிச் சம்பளம் கொடுக்கக்கூடாது என்று கருதினான்.

ஒருநாள் அச் சேவகன், அரசனை நோக்கி, "சுவாமி! நான் தாங்கள் இட்ட கஷ்டமான

வேலைகளையெல்லாம் செய்து முடிக்கின்றேனே. பார சுமை சுமக்கின்றேன். கடிதம் எடுத்துக் கொண்டு அதிக தூரம் போகின்றேன். தாங்கள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்கிறேன். நெற்றி வியர்வை நிலத்தில் விழ, முழுநாளும் உழைக்கும் எனக்குமாத்திரம் மாதம் எட்டு ரூபாய் சம்பளம். ஒரு வேலையும் செய்யாது வண்டி வாகனத்தில் ஏறிச் செல்லுகிற மந்திரி முதலியோருக்கு ஆயிரம் ரூபாய் சம்பளமா? எனக்கு ஏன் அவர்களைவிட இரட்டிப்புச்சம்பளம் கொடுக்கக்கூடாது!" என்று கேட்டான்.

அரசன் அவனுடைய புத்திக் குறைவிற்குச் சிரித்து, அவனுக்கு புத்தி கற்பிக்கச் சமயம் பார்த்திருந்தான்.

ஒருநாள் வீதியில் வண்டிகள் வரிசையாகப் போய்க்கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்து அரசன் சேவகனைக் கூப்பிட்டு "தெருவில் போவது என்ன! தெரிந்து வா" என்று உத்தரவு செய்தான். சேவகன் தெருவில் வந்து பார்த்து "வண்டி போகின்றது" என்முன்.

அரசன் மீண்டும் அச் சேவகனை நோக்கி, "அதில் என்ன சரக்குப் போகின்றது" என்று கேட்டான். சேவகன், தெருவுக்கு ஓடிப்போய் வண்டிக்காரரை விசாரித்து வந்து, "வண்டியில் வெல்லம் ஏற்றப்பட்டிருக்கின்றது" என்முன். மீண்டும் அரசன், "எந்த ஊர் வெல்லம்! விசாரி" என்முன். அதற்குள் வண்டி ஒரு பர்லாங்கு தூரம் சென்றுவிட்டது. அதுவரையில் சேவகன் ஓடி, எந்த ஊர் வெல்லம்" என்பதை விசாரித்து வந்து, "அது வேலூர் வெல்லம்" என்று

சொன்னான். ஆனால் "அது எங்கு போகிறது ! விசாரித்து வா" என்று அரசன் மீண்டும் அவனை ஏவினான். வெகுதூரஞ் சென்றுவிட்ட வண்டியைத் தேடிச்சென்று அது போகும் ஊரைக் கேட்டுவந்து சொன்னான்.

அரசன் இப்படியே, சரக்கின் விலை, தரம், முதலிய பல தகவல்களை அறிந்துவரச் சேவகனை மீண்டும் மீண்டும் அனுப்பினான். சேவகன் ஒவ்வொருதரமும் ஓடி ஓடிச் சென்று அவைகளை விசாரித்துவந்து தெரிவித்தான். அவனும் இவ்வோட்டத்தால் மிகவும் அலுத்துவிட்டான். உடனே அரசன் மந்திரியை அழைத்து, "வண்டியில் போகும் சரக்கைக் குறித்துத் தகவல் தெரிந்துவா" என்று கட்டளையிட்டான்.



மந்திரி புறப்பட்டுப்போய், வண்டிக்காரனை அழைத்து, சரக்கின் பெயர், சரக்குத் தயாரிக்கும் இடம், அதன் தரம், விலை, அது செல்லும் ஊர் முதலிய தகவல்களையெல்லாம் ஒரே தடவையில் விசாரித்துத் தெரிந்துகொண்டான். பின்பு அரசன் கேட்கும் தகவல்களுக்கெல்லாம் பதில் கொடுத்தான்.

அரசன், சேவகனை அழைத்து, "பார் உன் வேலைக்கும் மந்திரி வேலைக்குமுள்ள வித்தியாசத்தை! இதேபோல் எல்லாக்

காரியங்களும் இருக்குமென்று தெரிந்துகொள். புத்தி பூர்வமாகச் செய்யும் உத்தியோகஸ்தர்கட்கு அதிகச் சம்பளம் இதற்காகத்தான் கொடுப்பது. என்னுடைய அரசாங்க வேலைகள் இவர்களால் சுலபமாக முடிகின்றன. உன்னால் அவைகள் முடியா" என்று புத்தி சொன்னான்.

சேவகன் தான் அறிவில்லாமல் கேட்டதற்கு வெட்கமடைந்து ஒன்றும் பேசாமல் இருந்து விட்டான்.

புத்திக்குத் தகுந்த சுகம் கிடைக்கும்.

குறிப்புரை :

கருதினான் = எண்ணினான்; உழைக்கும் = வேலை செய்யும்; அலுத்துவிட்டான் = சலித்துவிட்டான்.

வினாக்கள் :

1. நவாப்பின் வேலைக்காரன் நவாப்பை என்ன கேட்டான்?
2. வேலைக்காரனுக்கு நவாப்பு எப்படிப் புத்தி கற்பித்தான்?

---

21. குடும்பம்

ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை,
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவர் அன்னை,
ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

—பாரதியார்.

---

22. சுகாதாரம்

எண்ணெய் முழுக்கு

"சனி நீராடு" என்பது அவ்வை வாக்கு. அதாவது ஒவ்வொருவரும், வாரம் ஒரு முறையாவது, அதிலும் சனியன்று, எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டுமென்பது பொருள். இவ்விதம் ஸ்நானம்செய்து வருவது உடம்பிற்கு மிகவும் ஆரோக்யத்தைக் கொடுக்கும். நாம், பூட்டுகள் கெட்டுவிட்டால், சரிப்படுத்துவதற்கு எண்ணெய் போடுகிறோம் அல்லவா? அதுபோல், நாம் எண்ணெய் தேய்த்துக்கொள்வதால் நம் உடம்பிலுள்ள பற்பல உறுப்புக்களுக்கு, எண்ணெய் இடப்படுகிறது.

நமது உடல் ஒரு இயந்திரத்திற்கு ஒப்பானது. எப்படி இயந்திரங்கள் வேலை செய்யுங்கால், எண்ணெய் இடப்பட்டு அதிக உஷ்ண மடையாமல், காக்கப்படுகின்றனவோ அதுபோலவே நமது சரீரம், எண்ணெய் முழுக்கால் அநுகூலமடைகிறது. உஷ்ணமான நம் நாட்டிற்கு, எண்ணெய் முழுக்கு மிகவும் அவசியமானது.

எண்ணெய் முழுக்கில் பலவகையுண்டு. தென்னாட்டிலுள்ள நமக்கு எவ்வகையிலும், பொருத்தமானது நல்லெண்ணெயே.

நல்லெண்ணெய் நமக்கு எள்ளிலிருந்து கிடைக்கிறது. இந்த எள் நெய் (எண்ணெய்) நமக்கு நல்ல பலனை அளிப்பதால் இதற்கு

நல்லெண்ணெய் என்ற காரணப் பெயர் வந்தது. இந்த எண்ணெய்க்குப் பதிலாக, சிலர் தைலம் தேய்த்துக் குளிப்பதும் உண்டு.

எண்ணெய் முழுக்கிற்குக் காலை வேளையே சிறந்தது. பச்சை எண்ணெய் தேய்த்துக் கொள்வதைவிட அதைக் காய்ச்சித் தேய்த்துக் கொள்வது நலம். அப்படிக் காய்ச்சும்பொழுது மிளகு, மஞ்சள், இஞ்சி இவைகளில் ஏதாவது ஒன்றைச் சேர்த்துக் காய்ச்சவேண்டும். எண்ணெய் தேய்த்துச் சிறிதுநேரம், ஊறுவது நல்லது. பிறகு வெந்நீரில் முழுகவேண்டும்.

வியாதியஸ்தர்கள் எண்ணெய் முழுக்கைத் தவிர்க்கவேண்டும். பேதிக்குச் சாப்பிட்ட அன்றாவது, க்ஷவரம் செய்துகொண்ட தினமாவது, வயிறு நிறையப் புசித்த பிறகாவது, எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல் மிகவும் கெடுதலானது. தினம் குளிப்பதற்குமுன் சிரசில், எண்ணெய் வைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்வதால் சுகமுண்டாகும்.

சரிவர எண்ணெய் தேய்த்து முழுகி வருவதால், உடம்பு பார்வைக்கு நல்ல மேனி உடையதாகும். உடம்பிற்குச் சோர்வு உண்டாகாது. தலைநோய் தவிரும். தலைமயிர் நன்றாக வளரும். நல்ல தூக்கம் வரும். கண்ணோய், சொறி, சிரங்கு முதலியன அணுகா. தேக வலிமையுண்டாம். ஆயுள் வளரும். இதனாலேயே, "வைத்தியரிடம் கொடுக்கும் பணத்தை வாணியரிடம் கொடு" என்பர் பெரியோர்.

குறிப்புரை :

வாக்கு=சொல்; ஆரோக்யம்=சுகம்; உறுப்புக்களுக்கு= அவயவங்களுக்கு. நலம்=நல்லது; தவிர்க்கவேண்டும்=நீக்க வேண்டும்.

வினாக்கள் :

1. 'சனிநீராடு' என்றால் என்ன பொருள் ?
2. எண்ணெய் தேய்த்துக்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் எவை ?
3. எண்ணெய் முழுக்கின் வகைகள் என்ன ?
4. யார் யார் எண்ணெய் முழுக்குக்குத் தகாதவர்கள் ?
5. எண்ணெய் முழுக்கைப்பற்றி நமது நாட்டில் வழங்கும் பழமொழிகள் எவை ?

---

23. ரப்பர் மரம்

காகிதத்தில் எழுதிய எழுத்துக்களை அழிப்பதற்கு நாம் ரப்பர் என்னும் பொருளை உபயோகிக்கிறோம். அதற்கு அப்பெயர் ஏன் வந்தது? முதலில் எழுத்துக்களை அழிப்பதற்கு அதை உபயோகப்படுத்தியதால் ஆங்கில பாஷையில் அதற்கு ரப்பர் என்ற பெயர் உண்டாயிற்று. ரப்பர் என்றால் தமிழ் மொழியில் துடைத்தல் என்று அர்த்தம். இப்போது ரப்பர் பல வேலைகளுக்கு உபயோகப்பட்டாலும் இன்னும் அதை ஜனங்கள் ரப்பர் என்றே அழைக்கின்றார்கள்.

ரப்பர் எப்படிச் செய்யப்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா? ரப்பர், அம்மரத்தின் பாலிலிருந்து செய்யப்படுகிறது. ரப்பர் மரம், நமது தேசத்திலுள்ள அத்தி, ஆலமரங்களைப் போல் பாலுள்ள மரவர்க்கத்தைச் சேர்ந்தது. அம்மரம் ஆதியில் தென் அமெரிக்காவிலும், மலேயா நாடுகளிலுமே இருந்தது. இப்போது திருவனந்தபுரம் இலங்கை முதலிய இடங்களில் அதைப் பயிர் செய்கிறார்கள்.

ரப்பர் மரம் மலைச்சாரல்களிலும் சிறு குன்றுகளிலும் செழிப்பாக வளரும். அது பத்துப் பன்னிரண்டு அடி உயரமாய் வளர்ந்தபின் கிளைகள் விட ஆரம்பிக்கும். கிளைகளில் அழகிய இலைகள் அடர்ந்திருக்கும். அந்த இலைகள் பார்ப்பதற்குப் பளபளப்பாயும், தொட்டால் மென்மை யுடையதாயுமிருக்கும்.

ரப்பர் மரத்தின் அடிமரத்தைச் சுற்றிக் கனமான பட்டை மூடிக்கொண் டிருக்கும். அப்பட்டையில் தடிப்பான திரவப் பொருள் உண்டு. அதுதான் ரப்பர் பால் என்று சொல்லப்படுகிறது.

ரப்பர் பால் சேகரிப்பவர்கள், மரத்தின் பட்டையை வெட்டி, அவ்வெட்டுக்குக்கீழ் தகரக் கிண்ணத்தைக் கட்டிவைப்பார்கள். அந்தக் கிண்ணத்தில் ரப்பர் பால் வடிந்து வரும். இதைப்போலவே ஒவ்வொரு மரத்திலும் பல கிண்ணங்கள் கட்டுவார்கள். அவற்றில் பால் நிரம்பியதும் அவைகளைக் கொண்டுபோய் ஒரு பெரிய தொட்டியில் கொட்டுவார்கள்.

பால் முதலில் சிறிது மஞ்சள் நிறமாக

இருக்கும். உலர்ந்தால் வெள்ளை நிறமாக மாறிவிடும். பாலை நெடுநேரம் வைத்திருந்தால் உலர்ந்து கெட்டியாய்விடும். ஆதலால் அதை அதிக நேரம் வைத்திருப்பதில்லை.

தொட்டியில் சேர்ந்த பாலை அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி, வேண்டிய அச்சுக்களில் வார்ப்பார்கள். அது உலர்ந்து கெட்டியாகும். ரப்பர் பாலை வெயிலிலும் காய்ச்சுவது உண்டு. இந்திய ரப்பரெல்லாம் வெயிலில் காயவைப்பதால் அது வெண்மை நிறமுடையதாயிருக்கிறது.

ரப்பர் உருகும் தன்மையுடையதாக இருப்பதால், அதை உருக்கிப் பலவித பொருள்கள் செய்துகொள்ளலாம். ரப்பரினால் துவிச்சக்கர வண்டி, மோட்டார் வண்டி முதலியவைகளுக்குச் சக்கரக் கட்டாகிய டயர், உள்ளிருக்கும் காற்றுப் பையாகிய ட்யூப் முதலியவை செய்யப்படுகின்றன. இப்போது செருப்புகளும், இடுப்பு அரைக் கச்சைகளுங்கூட அதனால் செய்கிறார்கள். ரப்பரில் தண்ணீர் இறங்காது. அதனால் அதை உருக்கித் துணிகளில் பூசி மேல் சட்டை தைக்கிறார்கள். அந்தச் சட்டையை அணிந்துகொண்டு மழையில் நடக்கலாம். ஒரு துளி ஜலம்கூட அதில் இறங்காது.

ஒரு அங்குல அளவுள்ள ரப்பரை ஒரு அடி நீளம் வரையில் இழுக்கலாம். ரப்பர் இழுத்தால் நீளும்; விட்டுவிட்டால் முன்போலச் சுருங்கிடும். இதற்கு நெகிழ்தல் என்பார்கள். இந்த விசேஷத் தன்மை இருப்பதனால் ரப்பர் பல காரியங்களுக்கு உபயோகப்படுகிறது. ரப்பர் நெகிழும் தன்மையோடு, அதைத் தரையில் மோதி

அடித்தால் குதிக்கும் தன்மையும்பெற்றிருக்கிறது. அதனால்தான் சிறுவர்கள் பந்து விளையாட்டிற்கு ரப்பர் பந்தை உபயோகிக்கிறார்கள்.

ரப்பர் வியாபாரம் நல்ல இலாபத்தைக் கொடுப்பதால், ஐரோப்பியர்கள் பல நாடுகளிலும், ரப்பர் தோட்டம் வைத்துப் பயிர் செய்கிறார்கள். அத்தோட்டங்களில் பலருக்குக் கூலி வேலை கிடைக்கிறது.

குறிப்புரை :

ஆதியில்=வெகு காலத்திற்குமுன், பூர்வத்தில்; திரவப் பொருள்=ஜலம் போன்ற பொருள்; மென்மை=மெல்லிய; மழமழப்பான.

வினாக்கள் :

1. ரப்பர் மரம் ஆதியில் எங்கு இருந்தது? அது எங்கு செழிப்பாக வளரும்?
2. ரப்பர் பால் எப்படிச் சேகரிக்கப்படுகிறது?
3. ரப்பர் பாலால் எப்படிப் பொருள்களைச் செய்கிறார்கள்?
4. ரப்பரின் உபயோகங்கள் எவை?
5. ரப்பரின் விசேஷ குணங்கள் எவை?



24. மின்சார வண்டி

மின்சார வண்டி, சென்னை, கல்கத்தா பம்பாய் முதலிய பெரிய நகரங்களில் ஓடுகிறது. பார்ப்பதற்கு ரயில் வண்டியைப்போல் இருந்தாலும், ரயில் வண்டியை இழுக்கும் நீராவியந்திரம் அதில் இல்லை. ஆனால் ரயிலைப் போல அதுவும் தண்டவாளத்தின்மீது ஓடுகிறது. மின்சார வண்டி நீராவி யந்திரம் இல்லாமல் எப்படி ஓடுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

மின்சார வண்டி, மின்சாரம் என்னும் ஒருவித சக்தியால் ஓடுகிறது. மின்சாரம் காற்றைப்போல நமது கண்ணுக்குப் புலப்படாது. காற்றைப் ஸ்பரிசத்தால் அறிவதுபோல அதை அது செய்யும் காரியங்களால்தான் அறியலாம். அச் சக்தியின் ஸ்பரிசம் நம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.

மின்சாரம் எல்லா வஸ்துக்களிலும் நிறைந்திருப்பதாக விஞ்ஞான சாஸ்திரிகள் கூறுகிறார்கள். இந்த மின்சார சக்தியைக் கண்டு

பிடித்துக் காரியத்தில் கொண்டுவந்தவர் ஆல்வாய் எடிஸன் என்ற பெரியார் ஆவர். அவர் அமெரிக்கா வாசி.

மின்சார சக்தியை ஒரு பெரிய இயந்திரத்தால் இயக்கி உற்பத்தி செய்கிருர்கள். அந்தச் சக்தியைத் தாமிரக் கம்பிகள் மூலம் வேண்டிய இடங்களுக்குக் கொண்டுபோய் விளக்குகள் எரிக்கவும், விசிறவும், மாவரைக்கவும், இன்னும் பல காரியங்கள் செய்யவும் உபயோகப் படுத்துகிருர்கள். அந்த மின்சார சக்தியே மின்சார வண்டி ஓட்டுவதற்கும் பயன்படுகிறது.

டிராம்வண்டி ரயிலைப்போலவே தண்டவாளத்தின்மீது ஓடுகின்றது என்று உங்களுக்குத் தெரியும். அது எப்படி ஓடுகின்றதென்பதை இனித் தெரிந்து கொள்ளுங்கள். வண்டி ஓடும் பாதைக்குமேலே தந்திக்கம்பிபோல, தாமிரக் கம்பிகள் வழிநெடுகக் கம்பங்களில் பொருத்தப்பட்டிருக்கும். அக் கம்பியை வண்டியின் உச்சிமேலிருக்கும் ஒரு கோல் தொட்டுக்கொண்டிருக்கும். அக்கோலின் முனையில் ஒரு சிறிய சக்கரம் காணப்படும். அது வண்டி ஓடும்போது கம்பியில் படிந்து சுழலும். படத்தில் மின்சார வண்டியைப் பார்.

தாமிரக்கம்பியில் மின்சார சக்தி இருக்கிறது. அச்சக்தி மேற்கூறிய கோலின் வழியாய் இறங்கி வண்டிக்கு அடியில் அமைக்கப்பட்டிருக்கும் மோட்டார் யந்திரத்தை இயக்கும். அதனுல் சக்கரங்கள் சுழல, வண்டி வேகமாய் ஓடுகிறது.

மின்சார வண்டியை ஓட்டுபவனுக்கு ஆங்கில மொழியில் மோட்டார்மேன் அல்லது டிரைவர்

என்று பெயர். அவற்றிற்கு, வண்டி இயக்குபவன் அல்லது ஓட்டுபவன் என்று அர்த்தம். அவன்வண்டியின் முன்பக்கத்தில் நின்றுகொண்டு வண்டியை ஓட்டுவான். அவ் வண்டியிலேயே இன்னொருவன் இருப்பான். அவனுக்குக் கண்டக்டர் என்று பெயர். அவன் வண்டியில் ஏறும் எல்லாருக்கும் டிக்கட்டிற்குரிய கட்டணம் வசூலித்துக்கொண்டு டிக்கட்டுக் கொடுப்பான். வண்டியை ஓட்டுவதற்கும் நிறுத்துவதற்கும் அடையாளமாக அவன் ஊதுகுழலினால் ஊதுவான். அதையறிந்து, ஓட்டுபவன் நடந்து கொள்ளுவான்.

ரயிலைப்போல மின்சார வண்டிகளுக்கு ஸ்டேஷன் இல்லை. ஒரு ஸ்டேஷனுக்கும் மற்றொரு ஸ்டேஷனுக்கும் மத்தியில் ரயில் ஓடிக்கொண்டிருக்கும்போது, வழியில் இருப்போர் அதில் ஏற முடியாது. மின்சார வண்டியை எங்குவேண்டுமானாலும் நிறுத்தலாம். சென்னை வீதிகளில் ஒரு பர்லாங்கு தூரத்தில் அநேக இடங்களில் "வண்டி நிற்கும் இடம்" என்றும், ஜனங்கள் "வேண்டினால் வண்டி நிறுத்தப்படும்" என்றும் குறிக்கப்பட்ட பலகைகள் தொங்கவிடப்பட்டிருக்கும். அவ்விடங்களில் நின்றுகொண்டு கையைக் காட்டினால் வண்டி நின்றுவிடும். அப்போது அதில் நாம் ஏறிக்கொள்ளலாம்.

முதலில் மின்சார வண்டிகள் நகர வீதிகளில் ஓடுவதற்கே ஏற்பட்டன. இப்போது ரயில் பாதையிலும் மின்சார வண்டிகள் ஓட ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். சென்னை

கடற்கரையிலிருந்து பதினேழுமைல் தூரமுள்ள தாம்பரம்வரையில் தென்னிந்திய ரயில்பாதையில் இப்போது மின்சார வண்டிகள் ஓடுகின்றன.

குறிப்புரை :

தாமிரக்கம்பி=செம்பினுல் செய்த கம்பி; பொருத்தப்பட்டிருக்கும்=சேர்க்கப்பட்டிருக்கும்; இயக்கும்=அசைக்கும், ஓடச் செய்யும்; இயக்குபவன்=ஓடச் செய்பவன்; கட்டணத்தை=தொகையை, பணத்தை.

வினுக்கள் :

1. மின்சாரமென்பது என்ன? அதை நாம் எவ்வாறு அறியலாம்?
2. மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? அவர் எத்தேசத்தவர்?
3. மின்சார சக்தியால் என்ன என்ன வேலைகள் நடைபெறுகின்றன?
4. மின்சார வண்டி எப்படி ஓடுகிறது?
5. மின்சார வண்டியில் நாம் ஏறவேண்டுமானுல் என்ன செய்ய வேண்டும்?

---

25. தீக்குச்சி செய்வது எப்படி?

பிள்ளைகளே! நீங்கள் விளக்கை எதனுல் ஏற்றுகின்றீர்கள்? உங்கள் தாயார் அடுப்பு மூட்ட நெருப்புக்கு என்ன செய்கிருர்கள்? தீக்குச்சியால் விளக்கு ஏற்றுவதையும், நெருப்புப் பற்றவைப்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

தீக்குச்சிகள் செய்வதற்கு முன் நமது நாட்டில் சிக்கி முக்கிக் கல்லை உபயோகித்து நெருப்பை உண்டாக்கி வந்தார்கள். சிக்கிமுக்கிக் கல்லில் நெருப்பு எப்படி உண்டாகும்? இரண்டு கன வஸ்துக்கள் ஒன்ருேடொன்று உரைவதால் நெருப்பு உண்டாகிறது. உங்கள் கையைத்

தேய்த்துப்பாருங்கள். கையில் சூடு உண்டாகிற தல்லவா ? காட்டிலுள்ள மரங்களும் காற்றினுல் ஒன்ருேடொன்று உரைந்து தீப்பற்றிக் கொள்ளுவதுண்டு. காட்டுத்தீ இப்படித்தான் உண்டாகிறது. அதைப்போலவே கற்களை ஒன்ருேடொன்று மோதினுலும், தேய்த்தாலும் நெருப்புப் பொறி உண்டாகும். அப்போது அதில் சிறிது பஞ்சை வைத்தால், பஞ்சு எளிதாகப் பற்றிக்கொள்ளும். அதிலிருந்து நெருப்பை அதிகமாக்கிக்கொள்ளலாம். நமது முன்னேர்கள் சிக்கிமுக்கிக் கல்லினுல் இப்படியே நெருப்பு உண்டாக்கினுர்கள்.

இப்போது அந்தக் கஷ்டமில்லை. எவரும் எளிதில் தீக்குச்சியைக்கொண்டு தீப்பற்ற வைக்கலாம். இத்தீக்குச்சிகள் யந்திரங்களினுல் செய்யப்படுவதனுல் சொற்பவிலைக்கு எங்கும் கிடைக்கின்றன. தீக்குச்சிகள் ஒரு சிறிய பெட்டியில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கும். அதற்குத் தீப்பெட்டி என்று பெயர். ஆங்கிலத்தில் அது மாட்ச் பாக்ஸ் என்று பெயர் பெறும்.

தீக்குச்சிகள் எப்படிச் செய்யப்படுகின்றன ? எளிதில் பற்றக்கூடிய ஒருவகை மரத்திலிருந்து சிறு குச்சிகளை யந்திரத்தினுல் அறுத்து எடுப்பார்கள். அக்குச்சிகள் சுமார் இரண்டரை அங்குல நீளமிருக்கும். அவற்றின் நுனியைக் கந்தகம், பாஸ்பரஸ், வெடியுப்பு, செம்மண், நீலம் ஆகிய பொருள்களை ஒரு அளவில் சேர்த்துக் கூட்டியிருக்கும் குழம்பில் தோய்ப்பார்கள். குச்சிகளில் மருந்து பிடிக்கும்.

அவற்றை உலர்த்தி, மெல்லிய பலகைகளைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் தீப்பெட்டிகளில் நிரப்புவார்கள். அத்தீப்பெட்டிகளில் இரு பக்கங்களிலும் தீக்குச்சிகளைப் பற்றவைப்பதற்கு மருந்து தடவப்பட்டிருக்கும். இக் குச்சிகள்



ஒரு பெட்டியில் நாற்பது அல்லது அறுபது இருக்கும். அரசாங்கத்தார், உப்பு வரி போலத் தீப்பெட்டிக்கும் வரி விதித்திருப்பதால் ஒரு தீப்பெட்டி அளவுக்குத் தகுந்தாற்போல மூன்று பை, அல்லது நான்கு பை விலையுடையதா யிருக்கும். தீப்பெட்டியில் வியாபாரக் குறியோடு அரசாங்கவரிச் சீட்டும் ஒட்டப்பட்டிருக்கும்.

முன் சொன்ன தீக்குச்சிகளுக்கு ஆங்கிலத்தில் சேப்டி மாட்ச் என்று பெயர். அதற்குப் பத்திரமான தீக்குச்சி என்று தமிழில் அர்த்தமாகும். இக்குச்சிகளைத் தீப்பெட்டியில் தேய்த்துத்தான் பற்றவைக்க வேண்டும். தீக்குச்சிகளில் மற்றொரு வகையுண்டு. அதில் பெட்டிகளின் இரு பக்கங்களிலும் கருமணல் போன்ற ஒரு வஸ்து தடவப்பட்டு இருக்கும். அவற்றிலுள்ளக் குச்சிகளை அப்பெட்டிகளிலும் தேய்த்துப் பற்றவைக்கலாம்; வஸ்துக்களின் மீதும் தேய்த்துப் பற்ற வைக்கலாம். தீப்பெட்டிகளை வியாபாரத்திற்குக்

கப்பல்களில் ஏற்றும்போது அவற்றிலுள்ள தீக்குச்சிகள் ஒன்றோடொன்று உரைந்து தீப்பற்றிக்கொள்ளுவதுமுண்டு. ஒவ்வொரு சமயங்களில் அதனால் வியாபாரிகளுக்கும் பெரு நஷ்டம் ஏற்படும். அதற்காக இப்போது அம்மாதிரி தீக்குச்சிகளை உண்டாக்காமல் பத்திர தீக்குச்சிகளை உண்டாக்குகிறார்கள்.

தீக்குச்சித் தொழில் ஐரோப்பாக் கண்டத்தில் ஆஸ்திரேலியா, ஸ்வீடன், நார்வே, முதலிய தேசங்களிலும், ஜப்பானிலும் அதிகமாய் நடைபெறுகிறது. நமது தேசத்திலும் இப்பொழுது இத்தொழில் பரவி வருகிறது. தமிழ் நாட்டில் சாத்தூர் என்ற ஊரில் தீக்குச்சித் தொழில் நடைபெறுவதைக் காணலாம். இத்தொழில் குடிசைத் தொழில் போலிருப்பதால், யாவரும் இதைச் செய்யலாம். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும் அல்லவா ?

குறிப்புரை :

உரைவதனால்=தேய்வதனால்; மோதினாலும்=அடித்தாலும்; எளிதில்=சுலபத்தில்.

வினாக்கள் :

1. தீக்குச்சிகள் உண்டாவதற்கு முன் நமது நாட்டில் நெருப்பை எப்படி உண்டாக்கி வந்தார்கள் ?
2, சிக்கி முக்கிக் கல்லில் ஏன் நெருப்பு உண்டாகிறது ?
3. காட்டுத்தீ எப்படி உண்டாகிறது ?
4. தீக்குச்சிகள் எத்தனை வகைப்படும்? பத்திரத் தீக்குச்சிகளினால் உண்டாகும் நன்மை யாது ?
5. தீக்குச்சிகள் செய்யப்படும் ஐரோப்பிய நாடுகள் எவை? தமிழ் நாட்டில் இவை எங்கே செய்யப்படுகின்றன ?



26. புத்திசாலித்தனம்

வடக்கே அஸ்திஞபுரத்தில், பாண்டவர்கள், கௌரவர்கள் என்று இரண்டு பங்காளிக் குடும்பங்கள் இருந்தன. அவர்களில் பாண்டவர் ஐவர். கௌரவர்கள் துரியோதனன் முதல் நூறுபேர் அண்ணன் தம்பிகள்.

இந்த நூற்றைந்துபேரும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசித்து வந்தார்கள். அவர்களில் பாண்டவர்கள் ஊக்கமாய்க் கல்வி கற்ருர்கள்; அதனுல் கெட்டிக்காரராக விளங்கிஞர்கள். கௌரவர்கள் கவனமாகப் படிப்பதில்லை. முரட்டுத்தனமும் மூடபுத்தியுமே அவர்களிடம் குடிகொண்டிருந்தன.

ஒருநாள் கௌரவர்களின் தகப்பஞர், "எங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பு வரவில்லையே. பாண்டவர்கள் மட்டும் நன்ருகப் படிக்கிருர்களே" என்று உபாத்தியாயரைக் கேட்டார்.

உபாத்தியாயர் :—நான் நூற்றைவருக்கும்

ஒரே மாதிரியாகத்தான் படிப்புச் சொல்லிக் கொடுக்கின்றேன். என்னிடம் வஞ்சகம் ஒன்றும் இல்லை. எல்லாம் அவரவர்களுடைய புத்திக்குத் தகுந்தாற்போல் இருக்கிறது. வேண்டுமானுல் பரிசோதித்துப் பாருங்கள்.

வந்தவர் :—எப்படிப் பரிசோதிக்கலாம்?

உபாத்தியாயர் :—கௌரவரிடத்திலும், பாண்டவரிடத்திலும் ஒவ்வொரு பொற்காசு கொடுத்து, ஒரு வீடு நிறைய பொருள்களைச் சேகரிக்கும்படி சொல்லலாம். அப்பொழுது அவர்கள் செயலைக் கொண்டு அவர்களுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டறியலாம்.

வந்தவர், சரி என்று ஒப்புக்கொண்டார். பாண்டவரையும் கௌரவரையும் அழைத்து, ஒவ்வொருவரிடமும் ஒரு பொற்காசு கொடுத்து, “நீங்கள் வீடு நிறைந்த பொருள்களைச் சேகரிக்க வேண்டும். நாங்கள் நாளையதினம் உங்கள் வீட்டிற்கு வந்து, சேகரித்துள்ள பொருள்களைப் பார்க்கின்ருேம். யாருடைய வீடு நிறைந்து இருக்கின்றதோ அவர்களுக்கு நல்ல வெகுமதி கொடுப்போம்” என்ருர்.

பாண்டவரும் கௌரவரும் காசுகளைப் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடம் போய், வீடு நிறைந்த பொருள்கள் எவற்றை வாங்குவது என்று யோசித்தார்கள்.

அவர்களில் கௌரவர்கள், “இந்தக் காசுக்கு அதிகமாய் என்ன பொருள் வாங்கமுடியும்? எது வாங்கினுல் வீடு நிறையும்?” என்று நெடுநேரம் தங்களுக்குள் ஆலோசனை செய்தனர். தங்களுடைய ஆலோசனையில், வைக்கோல்

வாங்கினுல்தான் வீடு நிறையும்; மற்ற எந்தப் பொருளும் வீடு நிறையக் கிடைக்காது என்று பட்டது. உடனே அதன்படி வைக்கோலை நிறைய வாங்கி வீட்டில் நன்ருகத் திணித்துவிட்டார்கள். இனி அவ்வீட்டில் கால் வைக்கவும் இடம் இல்லை. அதைக்கண்டு அவர்கள் சந்தோஷித்துப் பெரியோர்களுடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பாண்டவர்கள் புத்திசாலிகள். ஆதலால், தாங்கள் பெற்ற ஒரு காசுக்கு, நல்ல விளக்குகள் வாங்கி வீடு முழுவதும் வெளிச்சம் பரவும்படி ஏற்றிவைத்தனர். கூடத்தில் பாயை விரித்துச் சந்தன தாம்பூலாதிகளை வரிசையாக வைத்தனர். ஊதுவத்தியைக் கொளுத்தி எங்கும் வாசனை கம்மென்று பரிமளிக்கும்படி செய்தார்கள். இவை எல்லாம் முடித்து பெரியோர்கள் வருகையை அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

பெரியோர்கள் கூட்டமாக கௌரவர்கள் இருக்கும் வீட்டிற்கு முதலில் வந்தார்கள். அவ்வீடு முழுதும் வைக்கோல் நிரம்பி யிருந்ததனுல் அவர்கள் உள்ளே செல்ல முடியவில்லை. அதைப் பார்த்துவிட்டு அவர்கள் பாண்டவர்களுடைய வீட்டிற்குச் சென்ருர்கள். பாண்டவர்கள் அவர்களை எதிர்கொண்டழைத்துக் கூடத்தில் உட்காரவைத்து, வெற்றிலை பாக்குக் கொடுத்து உபசரித்தார்கள். வீடு முழுவதும் விளக்கு ஒளி பரவி, வாசனை வீசுவதைக்கண்டு அப்பெரியோர்கள் "இவைதான் வீடு நிறைந்து இருக்கின்றன. வீட்டிற்கு நிறைந்த பொருள்கள் இவையே" என்று புகழ்ந்தார்கள்.

அவர்கள் தீர்மானப்படி பாண்டவர்களுக்குப் பரிசு கிடைத்தது. இதையறிந்த கௌரவர்களின் பிதா, "உபாத்தியாயரால் பிசகு இல்லை. நம் பிள்ளைகளுக்குப் புத்தி மிகக் குறைவு. அவர் என் செய்வார்?" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

குறிப்புரை :

பங்காளிகள் = அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள்; பரிசோதித்து = பரீக்ஷித்து; சேகரிக்க = சேர்க்க; வெகுமதி = இனம்; பரிமளிக்கும்படி = வாசனை வீசும்படி.

வினாக்கள் :

1. பாண்டவர்களும், கௌரவர்களும் யாவர்? அவர்களில் கௌரவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
2. பாண்டவர் கௌரவர்களின் புத்திசாலித்தனத்தைப் பரிசோதிக்க உபாத்தியாயர் செய்த ஏற்பாடு யாது?
3. கௌரவர்கள் வீட்டை எவ்வாறு நிறைத்தார்கள்? பாண்டவர்கள் நிறைத்த விதம் யாது?

---

27. பாப்பாவுக்கு அறிவுறுத்தல்

1. பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

2. துன்பம் நெருங்கி வந்த போது—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா.

3. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பியழுங் குழந்தை நொண்டி—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

4. உயிர்களிடத்தில் அன்புவேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா.

—பாரதியார்

---

28. ஊர்வன

பூமியின்மேல் ஊர்ந்து, அல்லது நகர்ந்து செல்லும் பிராணிகளுக்கு ஊர்வன என்று பெயர். ஊர்வனவற்றில் சிலவற்றிற்குக் கால்கள் உண்டு. சிலவற்றிற்குக் கால்கள் இல்லை. ஆயினும் அவை நிலத்தின்மேல் ஊர்ந்துசெல்லும் சக்தி பெற்று இருக்கின்றன. ஊர்வனவெல்லாம் பறவைகளைப் போல முட்டை யிடுகின்றன. ஆனால் அவை பறவைகளைப்போல அடைகாத்துக் குஞ்சுகள் பொரிப்பதில்லை. சூரிய வெப்பத்தினால் அவற்றின் முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்படுகின்றன.

பாம்பு, பல்லி, முதலை, ஆமை முதலியனவும் ஊர்வனவற்றிற் சேர்ந்தவையே. அவற்றுள் பாம்புக்குக் கால்கள் கிடையா. அதன் உடல் உருண்டு திரண்டு கயிறுபோல நீண்டிருக்கும். அதற்கு உடம்பு முழுவதும் மீனைப்போலச் செதில்கள் அடர்ந்திருக்கின்றன. நமக்கு

இருப்பதுபோலச் செவிகள் அதற்கு வெளிப்படையாக இல்லை. அவற்றிற்குப்பதிலாகக் கண்களுக்கு அடுத்தாற்போல் இரு பக்கங்களில் ஐவ்வுகள் அமைந்திருக்கின்றன.



பாம்புக்கு நாக்கு நீளமானது. அது இரு பிளவாய் இருக்கும். மேல் வாயிலும் கீழ்வாயிலும் அதற்குப் பற்கள் உண்டு. அப்பற்கள் உள்பக்கமாய் வளைந்திருக்கும். அதனால் பாம்பு எதையும் விடாமல் பிடித்துக்கொள்ளும்.

பாம்புகளில் பலவிதமுண்டு. அவற்றை விஷமுள்ள பாம்புகள் என்றும் விஷமில்லாத பாம்புகள் என்றும் இருவிதமாகப் பிரிக்கலாம். விஷமுள்ள பாம்புகளில் நாகப்பாம்பு மிகக் கொடியது. அதற்குத் தலையில் படம் உண்டு. அது கோபம்வந்தால் படத்தை விரித்துச் சீறும். அதன் மேல்வாயில் இரண்டு நீண்ட பற்கள் இருக்கின்றன. அவை துவாரமுடையவை. அவற்றிற்கு அடியில் விஷப்பைகள் உண்டு. அது ஒரு பிராணியைக் கடிக்க நேர்ந்தால், அந்தத் துவாரமுள்ள நீண்ட பற்களால் கடித்து அவற்றின்மூலம் விஷத்தைக் கக்கும். காயத்தில் சேர்ந்த விஷம் பிராணியின் உடலில் இருக்கும் இரத்தத்துடன் பரவிவிடும். விஷம் பரவியதும் பிராணி இறந்துவிடும்.

நாகப் பாம்பு கடிக்கப்பெற்றவர், தாமதிக்காமல் கடிக்கப்பட்ட இடத்திற்குமேல் ஒரு கயிற்றால் இறுகக் கட்டிவிடவேண்டும். பின்பு

கடிக்கப்பட்ட பாகத்தில் கூரிய கத்திகொண்டு கீறினால் இரத்தம் மேலே பரவாமல் வடிய ஆரம்பிக்கும். அப்போது விஷம் வெளிப்பட்டு விடும். இவ்விதம் செய்யாமற்போனால் நாகப் பாம்பால் கடிக்கப்பட்டவர் இறப்பது நிச்சயம். இந்தக் கொடிய பாம்புக்குத்தான் நல்ல பாம்பு என்று ஒரு பெயரும் உண்டு.

ஊர்வனவற்றில் மற்றொன்று பல்லி. அது நமது வீட்டுச் சுவர்களில் வசிக்கும். அதற்குக் குறுகிய நான்கு கால்கள் உண்டு. அதன் உடல் முழுவதும் கனத்த செதில்கள் மூடிக்கொண்டு இருக்கும். அப்படி யிருப்பதால் அது தேளுக்குப் பயப்படுவதில்லை. அதன் உடலில் தேள் கொட்டினாலும் விஷம் ஏறாது. தேள், சிறிய பூச்சி, புழு முதலியவைகளை அது பிடித்துத் தின்னும்.

முதலை, பல்லி வர்க்கத்தில் சேர்ந்தது. அது உருவத்தில் முழுவதும் பல்லியையே ஒத்திருக்கும். ஆனால் பல்லியைவிட அது மிகப்பெரியது.



அதன் உடலிலுள்ள செதில்களும் கனமானவை. துப்பாக்கியால் சுட்டாலும் அச் செதில்களில் குண்டு பாயாது. அவை கத்தியாலும் அறுபடா.

முதலை நீரிலும் நிலத்திலும் வசிக்கும். அது நீரிலிருக்கும்போது அதை வெல்ல ஒருவராலும் முடியாது. யானையையும் நீருக்குள்

இழுத்துக் கொன்றுவிடும் சக்தி அதற்கு உண்டு. அது சமுத்திரம், வற்றாத நதி முதலிய பெரிய நீர் நிலைகளில் வசிக்கும். முதலை வசிக்கும் நதிகளில் மனிதன் தெரியாமல் இறங்கிவிட்டால் அது அவனைப் பிடித்துக் கொன்று ஆகாரமாக்கிக்கொள்ளும்.

ஆமையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது விசித்திரமான உடலமைப்பு உடையது. அதன் உடலின் மேலும் கீழும் கெட்டியான இரண்டு ஓடுகள் மூடிக்கொண்டிருக்கும். அதற்கு நான்கு கால்களும் ஒரு தலையும் உண்டு. கால்கள் குட்டையானவை. அதற்கு ஏதாவது தீங்கு நேரிடுவதாயிருந்தால் அது தலையையும் கால்களையும் ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும். அப்போது அதைப் பார்த்தால், அது ஒரு உயிரற்ற பொருள்போலக் காணப்படும். வெளியில் தனக்குத் தீங்கு இல்லையென்று தெரிந்த பின்பே அது தலையை நீட்டிக்கொண்டு செல்ல ஆரம்பிக்கும்.



ஆமை நிலத்தின்மேல் மெதுவாக ஊர்ந்து செல்லும். மெதுவாக நடப்பவர்களைப் பார்த்து, ‘ஆமை நடை நடக்கிறாயே’ என்று சொல்வது உண்டு. ஆமை நீரிலும் வசிக்கும். அது நீரில் நன்றாய் நீந்தவல்லது. சிறிய ஆமைகள் புல் பூண்டுகளையும், பூச்சிகளையும் பிடித்துத் தின்னும். கடலில் வசிக்கும் பெரிய ஆமைகள், மீன்களையும் முதலைகளின் முட்டைகளையும் ஆகாரமாகக்

கொள்ளும். ஆமை நெடுங்காலம் ஜீவித்து இருக்கும்.

குறிப்புரை :

பல்லி வர்க்கத்தில்=பல்லி இனத்தில்; வெல்ல=ஜெயிக்க; தீங்கு=கெடுதி.

வினுக்கள் :

1. ஊர்வனவற்றிற்கும் பறவைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை?
2. பாம்பின் பற்கள் எவ்வாறு அமைந்துள்ளன? அவற்ருல் அது என்ன செய்கிறது?
3. நாகப்பாம்பு கடித்தால் செய்யவேண்டியது என்ன?
4. பல்லி, தேளுக்கு ஏன் பயப்படுவது இல்லை?
5. முதலை எங்கு வசிக்கும்? அது எங்கிருக்கும்போது அதற்குப் பலம் அதிகம்?
6. ஆமையின் உடல் எவ்வாறு அமைந்து இருக்கிறது? ஆமையின் ஆகாரம் யாது?

---

29. நவராத்திரி என்ருல் என்ன?

நவராத்திரி என்ருல் ஒன்பது இரவுகள் என்று பொருள்படும். ஒன்பது இரவுகளிலும் தொடர்ந்து கொண்டாடும் பண்டிகைக்கு நவராத்திரி என்று பெயர் உண்டாயிற்று. இப்பண்டிகை, புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாளாகிய பிரதமை திதிமுதல் ஆரம்பமாகிறது. அன்றுமுதல் நவமி திதி வரையில் ஒன்பது நாளும் இந்துக்கள் நவராத்திரிப் பண்டிகையை விசேஷமாகக் கொண்டாடுவர்.

நவராத்திரி காலத்தில், பெண்கள் வீட்டுக் கூடத்தை அழகாக அலங்காரஞ் செய்து, சங்கரி,

இலக்ஷ்மி, சரஸ்வதி முதலிய தேவி படங்களையும், விதம் விதமான பதுமைகளையும் அவ்விடத்தில் கொலு வைப்பார்கள். அவற்றைச் சுற்றித் தீபாலங்காரங்களும் செய்யப்பட்டிருக்கும். அக் காட்சி பார்க்கத் தகுந்தவை. அந்த நற்காட்சிக்கு முன்னே, பாடத்தெரிந்த பெண்கள் வரிசையாக உட்கார்ந்துகொண்டு, தேவியைக் குறித்து இனிய பாடல்களைப் பாடிப் பூஜை செய்வார்கள்.

அந்தப் பூஜையைக் காண ஊரிலுள்ள பெண்டிரும் சிறுமியரும் திரண்டு வருவார்கள். அவர்களுக்கெல்லாம், பூஜை செய்யும் வீட்டுப் பெண்கள் சந்தனம், புஷ்பம், குங்குமம், தாம்பூலம் முதலியவைகளையும், தேவி முன் படைத்த தின்பண்டங்களையும் வழங்குவார்கள். இப்படியே இந்துக்களின் ஒவ்வொரு வீட்டிலும் நடைபெறும்.

ஆடவர் இந்த ஒன்பது இரவுகளிலும், புராண இதிகாசங்கள் படித்தும், சங்கீதக் காலக்ஷேபங்கள் செய்தும், ஆலயத்தில் அம்பிகை பூஜை செய்தும் மகிழ்வார்கள். இவ்வாறு செய்தால் சக்தியின் அருள் கிடைக்கும் என்றும், அதனால் கல்வி, செல்வம், சுகம் முதலியவை விருத்தியாகுமென்றும் கூறுகின்றார்கள்.

மைசூர், திருவாங்கூர், புதுக்கோட்டை முதலிய சுதேச சமஸ்தானங்களில் இப்பண்டிகை விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. சுதேச மன்னர்கள் அக்காலத்தில் வித்துவான்களுக்குப் பரிசுகள் அளித்துச் சுதேச பாஷையைப் போற்றுகிறார்கள். சங்கீத வித்துவான்களையும் அங்ஙனமே ஆதரிக்கின்றார்கள். வீரர்களுக்குப்

பதக்கமளித்து வீரப்பிரதாபத்தை மெச்சுகிறார்கள். கைத்தொழில் பொருள்களைக் காட்சிச் சாலைகளில் வைத்து, அவை செய்தோருக்குத் தங்கம் வெள்ளிப் பதக்கங்களும், அத்தாக்ஷிப் பத்திரங்களும் வழங்குகின்றார்கள். இங்ஙனம் நவராத்திரிப் பண்டிகையை யாவரும் கொண்டாடி வந்தால் நம் தேசத்தில் எல்லாக் கலைகளும் அபிவிருத்தியாகும் அல்லவா?

நவராத்திரி தினங்களில் ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூஜை தினமாகும். அன்று யாவரும் தங்களுக்குரிய முக்கியமான சாமான்களை வைத்துப் பூஜை செய்வார்கள். படித்தவர்கள் புத்தகங்களை வைத்து, அவற்றைச் சரஸ்வதி தேவியாகப் பாவித்துப் பூஜிப்பார்கள். தச்சர் கொல்லர் முதலிய தொழிலாளிகள் தங்கட்குரிய ஆயுதங்களை வைத்துப் போற்றுவார்கள். அதனால் அன்றைய தினத்தை ஆயுத பூஜையென்றுங் கூறுவதுண்டு.

வங்காளம் முதலிய வடநாட்டில் இப் பண்டிகையைப் பத்து நாட்கள் வரை கொண்டாடுகிறார்கள். அங்கே இதற்குத் தசராப் பண்டிகை யென்று பெயர். பத்தாம் நாள் தசமி தினத்தை வெற்றிதினமாகக் கொண்டு அதை விஜயதசமி யென அழைக்கின்றார்கள். அன்று எல்லாப் புதுக் காரியங்களும் தொடங்கப்படுகின்றன. சிறுவர்களுக்கு வித்தியாப்பியாசமும் அன்றுதான் செய்யப்படும்.

இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதற்குக் காரணம் அடியிற்கண்டிருக்கும் வரலாற்றைக் கூறுகின்றனர்:

சுகேது என்னும் அரசன் சுவேதி என்ற அரசியோடு சுகமாக வாழ்ந்திருந்தான். அவன்மீது அவனுடைய தாயாதிவர்க்க அரசர்கள் போர் தொடுத்து அவனைத் தோற்கடித்தார்கள். அவன் அரசு துறந்து தன்னுடைய அரிய மனைவியுடன் வனசஞ்சாரஞ் செய்தான்.

அப்போது அவ்வனத்திற்கு ஆங்கிரச முனிவர் என்பவர் ஒருவர் வந்தார். அவர் அந்த இராஜ தம்பதிகளுடைய வரலாற்றைக் கேட்டறிந்து அவர்களைப் பஞ்சவடிதீரத்திற்கு அழைத்துச் சென்றார். அவ்விடத்தில் சுவேதியை நீராடச் செய்து, நவராத்திரி விரதம் முறைப்படிச் செய்யும் விதத்தையும், அதனால் உண்டாகும் நற்பலனையும் சொன்னார். முனிவர் கூறியபடியே சுவேதி, புரட்டாசி மாத அமாவாசைக்கு மறுநாளாகிய பிரதமை முதல் மூன்று நாள் உருத்திரியையும், நான்காம் நாளாகிய சதுர்த்தி முதல் மூன்று நாள் இலக்ஷ்மியையும், ஏழாம் நாளாகிய சப்தமி முதல் மூன்று நாள் சரஸ்வதி தேவியையும், மங்கலப் பொருள்களால் பூசித்துப் பத்தாம் நாள் தசமியன்று விரதத்தைப் பூர்த்திசெய்தாள்.

அதன் பலனாகச் சுவேதி கருப்பமுற்றுச் சூரியப் பிரதாபன் என்னும் பிள்ளையைப் பெற்றாள். அப்பிள்ளை ஆங்கிரச முனிவர் உதவியால் சகல வித்தைகளையுங் கற்றுத் தேர்ந்தான். அதன்பின் அவன் தன் பிதாவைத் தோற்கடித்த அரசன்மேல் சண்டைக்குச் சென்று வெற்றிபெற்று முடிசூடி மாதா பிதாக்களின்

வருத்தத்தைப் போக்கடித்தான். அன்றுமுதல் சுவேதி அரசி மேற்கொண்ட நவராத்திரி விரதத்தை நமது பரதகண்டவாசிகள் கொண்டாடி வருகின்றனர்.

குறிப்புரை :

அக்காட்சி=அத்தோற்றம்; மகிழ்வார்கள்=ஆனந்திப்பார்கள்; காலக்ஷேபங்கள்=பிரசங்கங்கள், கச்சேரிகள்; போற்றுவார்கள்=வணங்குவார்கள்; சஞ்சாரம்=வாசம்; தம்பதிகள்=கணவனும் மனைவியும்.

வினாக்கள் :

1. நவராத்திரி என்றால் என்ன? நவராத்திரிப் பண்டிகை எப்போது ஆரம்பித்து எப்போது முடிவடையும்?
2. இப்பண்டிகையைப் பெண்கள் எவ்வாறு கொண்டாடுவார்கள்? ஆண்கள் எப்படிக் கொண்டாடுவர்?
3. நம்தேசத்தில் எல்லோரும் நவராத்திரிப் பண்டிகையைக் கொண்டாடிவந்தால் என்ன நன்மை ஏற்படும்?
4. இப்பண்டிகையின் பத்தாந் தினத்திற்குச் சரஸ்வதி பூஜையென்றும், ஆயுதபூஜை என்றும் பெயர் வழங்கும் காரணம் யாது?
5. நவராத்திரிப் பண்டிகைக்குக் காரணமாகக் கூறும் கதை யாது?



சென்னை நகரசபை

30. ஸ்தல சுய ஆட்சி

ஸ்தல சுய ஆட்சி என்றால் ஊர் சுய ஆளுகை என்று பொருள்படும். பெரிய நகரங்களையும், கிராமங்களையும் குடிகளே சுய ஆளுகை புரியும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பெரிய நகர ஆளுகைக்கு முனிஸிபாலிடி என்றும், கிராம ஆளுகைக்குப் பஞ்சாயத்துப் போர்டு என்றும் பெயர். பஞ்சாயத்துப் போர்டுகள் இல்லாத கிராமங்களின் பொது நலங்களையும் இன்னும் பிற பொதுக் காரியங்களையுங் கவனித்துப் பரிபாலனஞ் செய்து வருவது ஜில்லா போர்டு. இவைகளைப் பொதுவாக ஸ்தல ஸ்தாபனங்கள் என்று கூறுவார்கள்.

பெரிய நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வசிப்பார்கள். அங்கே அநேக பெரிய

வீதிகள் இருக்கும். ஜனநாட்டமும் வண்டிப் போக்குவரவும் அதிகமாய் இருக்கும். அதனுல் வீதிகள் அசுத்தப்படும். தரை மேடுபள்ளமாகும். அவற்றை அடிக்கடி சுத்தமும் மராமத்தும் செய்யவேண்டும். நிலவில்லாத இருட்டுக் காலங்களில் தெருவழியே செல்ல வெளிச்சம் வேண்டும்; அங்கு வசிப்பவர்களுக்கு நல்ல தண்ணீர் வேண்டும்; நோய்நொடியில் விழுந்தவர்களுக்கு வைத்திய வசதி தேவை; எல்லா மக்களுடைய பிள்ளைகள் வாசிக்கப் பாடசாலைகள் வேண்டும்.

இவற்றையெல்லாஞ் செய்யப் பணம் அதிகம் வேண்டும் அல்லவா? இதற்காக ஜனங்கள், பல வரிகள் மூலம் பணம் கொடுப்பார்கள். இவைகளைப் பரிபாலனஞ் செய்யப் பிரதிநிதி சபை ஏற்பட்டிருக்கும். அச் சபையார் வீட்டு வரி, நிலவரி, நீர்வரி, தொழில்வரி, வண்டி வாகனுதிகள் வரி முதலிய வரிகளை நிர்ணயித்து நகர மக்களிடமிருந்து வசூல் செய்வார்கள்.

அந்தப் பணத்தைக்கொண்டே வீதி சுத்தம் செய்தல், மராமத்துச் செய்தல், பொது இடங்களிலும் வீதிகளிலும் தீபம் ஏற்றுதல், தண்ணீர்க் குழாயமைத்தல், வைத்தியசாலை ஏற்படுத்துதல், பள்ளிக்கூடம் வைத்தல் முதலிய பல பொது நன்மையான வேலைகளைச் செய்வார்கள். இந்த முக்கியமான வேலைகளின் பரிபாலனத்திற்காக ஸ்தல ஸ்தாபனங்கள் நிர்மாணித்து அவைகட்கு மூன்று வருடங்கட்கு ஒருதடவை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் ஏற்பாடுகள் அரசாங்கத்தார் செய்திருக்கிறுர்கள்.

அப்போது கடமை யுணர்ந்து, சுயநலம் கருதாமல், ஜன சமூகத்திற்குப் பாடுபடக்கூடிய பிரதிநிதிகளை, நாம் தேர்ந்தெடுத்து அந்த ஸ்தாபனங்களுக்கு அனுப்பவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் ஸ்தல ஸ்தாபனங்களின் பரிபாலனம் ஒழுங்காக இராது.

அரசாங்கத்தாரும், கல்வி, சுகாதாரம், போக்குவரவு வசதி முதலிய பொது ஜன நன்மைகளைச் செய்துவரக் கடமைப்பட்டவர்கள். அதற்காக அவர்கள் ஆண்டுதோறும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பணம் கொடுத்து உதவி செய்து வருகிறார்கள். அதனுடன் அவைகளின் பரிபாலனமும் ஒழுங்காக நடைபெறுகின்றனவா வென்றும் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.

குறிப்புரை :

ஸ்தல சுய ஆட்சி = ஊரை அவ்வூரின் ஜனங்களே ஆளுதல். நலங்களையும் = நன்மைகளையும்; பரிபாலனம் = ஆட்சி.

வினாக்கள் :

1. நகர ஆளுகைக்கும், கிராம ஆளுகைக்கும் வழங்கும் பெயர்கள் எவை ?
2. நகர பரிபாலன சபைக்குப் பணம் எவ்வாறு கிடைக்கிறது ?
3. நகர பரிபாலன சபை செய்யும் வேலைகள் என்ன ?
4. எப்படிப்பட்டவரை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அனுப்புதல் வேண்டும் ?

31. ஸர் ஜகதீச சந்திரபோஸ்

ஸர் ஜகதீச சந்திரபோஸ் உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞான சாஸ்திரிகளில் ஒருவர். இவர் வங்காளத்தில், விக்ரமபுரியில் 1858ம் ஆண்டில் பிறந்தார். பகவன் சந்திரபோஸ் என்பவர் இவரது தந்தை. இளமையிலேயே உலகத்தவர்க்குத் தெரியாத புதிய விஷயங்களை ஆராய்ந்து கண்டுபிடிக்கவேண்டுமென்ற ஆவல் இவரிடம் புலனாயிற்று.

போஸ் முதலில் ஒரு கிராமப் பாடசாலையிற் கல்வி பயின்றார். பிறகு, கல்கத்தாவிலுள்ள செயிண்ட் ஸேவியர் கலாசாலையில் வாசித்து பீ. ஏ. பட்டம் பெற்றார். இவரது முன்னேற்றத்தைக் கோரிய இவர் தந்தை இவரை இங்கிலாந்து தேசத்திற்கு உயர்தரக் கல்வி பயிலுமாறு அனுப்பிவைத்தார்.

இவர் இங்கிலாந்தில் 1885ம் ஆண்டில் பி. எஸ்ஸி. பரிக்ஷையில் தேறினார்.

அதே வருடத்தில் இவர் தனது தாய் நாட்டிற்குத் திரும்பிவந்து கல்கத்தாவிலுள்ள மாகாணக் கல்லூரியில் விஞ்ஞான சாஸ்திர போதகராக அமர்ந்தார். முதல் மூன்று வருடங்களில் இவரது ஆராய்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வேண்டிய வசதிகள் இவருக்கு ஏற்படவில்லை.

சிலவருடங்கட்குப் பிறகு அக் கலாசாலையில் ஒரு ரசாயனசாலை அமைக்கப்பட்டது. அது முதல் இவர் தனது ஆராய்ச்சிகளை அதிக ஊக்கத்துடன் நடத்தலாயினர். பத்திரிகைகளில் விஞ்ஞான சாஸ்திரத்தைப்பற்றிய விஷய தானங்கள் பல புரிய ஆரம்பித்தார். அவ் விஷயங்களில் மின்சாரத்தைப்பற்றி அவர் எழுதியவை மிகச் சிறந்தனவாக விளங்கின.

பிறகு அவர் எழுதிய வியாசமொன்றை இங்கிலாந்திலுள்ள அரசாங்க சங்கத்தார் பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்ததுமன்றி, அவருக்கு வெகுமதியாக ஒரு பண முடிப்பையும் அளித்தார். அதன்பிறகுதான் வங்காள அரசாங்கத்தார் அவருக்குப் போதிய நன்மையைச் செய்ய முன்வந்தனர்.

விஞ்ஞான உலகத்தில் இவர் புதிதாகக் கண்டு பிடித்த விஷயங்களை வியந்து லண்டன் நகரத்துச் சர்வகலாசாலையார் இவருக்கு டாக்டர் பட்டம் அளித்தனர். இவரை முதலில் பிரசித்தமாக்கி வைத்தது, கம்பியில்லா மின்சார தந்தியைப்பற்றி இவர் செய்த ஆராய்ச்சியே யாகும். இவர் ஆராய்ந்து கண்டுபிடித்த விஷயங்களைத் தக்க இயந்திரங்களின் உதவியில்

நிரூபித்தனர். அவ் விஷயங்களைப்பற்றி இங்கிலாந்திலுள்ள ஆராய்ச்சி சங்கத்தாரின்முன் சொற்பொழி வாற்றும்படி இவர் அழைக்கப் பட்டதே, இவருடைய பேராற்றலை விளக்குகிறது. இத்தகைய சொற்பொழிவுகளை இவர் நான்கு முறை இங்கிலாந்தில் நிகழ்த்தியுள்ளார். அக்கால், பிராணிகளுக் கிருப்பதுபோலவே தாவரங்கட்கும் உயிரும் உணர்வும் உண்டு என்பதைப் பல உபகரணங்களின் உதவியால் நிரூபித்துக் காட்டினர். இவரது ஆராய்ச்சியின் உண்மைகளை இவருடைய விரோதிகள் பலர் ஆக்ஷேபித்தனர். ஆனல் முடிவில் இவரே ஜெயம்பெற்றார்.

இங்கிலாந்துமட்டுமின்றி இவர் பிரான்ஸ் தேசத்திலுஞ் சென்று பல அரிய விஷயங்களைப் பற்றிப் பிரசங்கித்துள்ளார். பின்னர் ஜெர்மனி தேசத்திற்கும், அமெரிக்காவிற்குஞ் சென்று தனது கீர்த்தியை நிலைநாட்டினர். அமெரிக்காவில் இவருக்குப் பல உபசாரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இவர் ஒலியின் வியாபக அளவை நிர்ணயிப்பதற்காகக் கண்டு பிடித்துள்ள இயந்திரம் உலகத்தில் எல்லோராலும் சிறந்தது எனக் கொண்டாடப்படுகிறது. இந்திய சர்க்கார் இவரை நான்கு முறை அகில உலக விஞ்ஞான மகாநாட்டிற்கு அனுப்பி வைத்ததுமன்றி, இவருக்குச் "சர்" பட்டமும் அளித்தனர்.

இவரது 59வது ஆண்டு பூர்த்தியன்று இவர் இரசாயன ஆராய்ச்சி சாலை யொன்றைக் கல்கத்தாவில் ஏற்படுத்தினர். தாவரங்களின் இடத்தில் உண்டாகும் மாறுதல்களைக்

காண்பதற்கு இவர் கண்டுபிடித்த "கிரெஸ்கோ கிராப்" என்னும் கண்ணுடியின் உதவியால் ஒரு விஞடியில் ஒரு செடி எவ்வளவு வளர்கின்றது என்பதை நாம் நேரிற் காணமுடியும். இதுவன்றி மரங்களுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து அவற்றை இடம்விட்டு இடம்பெயர்த்துவைத்து, அவை தாம் இருந்தநிலேயிலிருந்து மாறுதலின்றி அப்படியே வளரச் செய்வதற்கு வேண்டிய புதிய முறைகளைக் கண்டு பிடித்துள்ளார்.

இவருக்கு இப்போது வயது 77 ஆகிறது. இவரைப்போன்ற பேரறிவாளர் இந்தியாவில் தோன்றியதைக் குறித்து நாம் பெருமையும், இவரைப்போல் நாமும் ஆராய்ச்சியிலுழைத்து முன்னேற்றம் அடைய ஊக்கமும் கொள்ளுதல் அவசியம் அல்லவா?

குறிப்புரை :

விஞ்ஞானசாஸ்திரி=ஒளி, வெளி, காற்று முதலியவற்றைப் பற்றிய சாஸ்திரத்தில் வல்லவர்; ஆவல்=ஆசை; புலனுயிற்று=வெளியாயிற்று; வியந்து=மெச்சி; அளித்தனர்=கொடுத்தனர்; சொற்பொழிவு=பிரசங்கம்; நிகழ்த்தியுள்ளார்=நடத்தியுள்ளார்.

விஞக்கள் :

1. ஜகதீச சந்திரபோஸ் யார்? அவர் பிறப்பிடம் யாது? அவர் தந்தை யார்?
2. அவர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்து எத் தொழிலில் அமர்ந்தார்?
3. முதலில் அவர் தன்னை எவ்வாறு உலகத்து மக்களுக்குத் தெரியும்படி செய்தார்?
4. அவர் கண்டுபிடித்த புதிய விஷயங்கள் யாவை?

32. வெற்றிவேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
6. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
7. உண்டிக் கழகு விருந்தோடுண்டல்.
8. பெண்டிர்க் கழகு எதிர்பேசாதிருத்தல்.
9. அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்.
10. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
11. தேம்படு பனையின் திறள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
12. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
13. பெரியோ ரெல்லாம் பெரியரும் அல்லர்.
14. சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்.
15. பெற்றோ ரெல்லாம் பிள்ளைகள் அல்லர்.
16. உற்றோரெல்லாம் உறவினர் அல்லர்.
17. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
18. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
19. அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது.
20. புகைக்கினும் கார் அகில் பொல்லாங்கு கமழாது.

21. கலக்கினும் தண்கடல் சேறு காது.

22. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

23. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

24. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

25. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.

26. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

27. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

28. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதராகும்மே.

29. நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழிருப் பவனே.

30. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்.

31. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

32. யானைக் கில்லை தானமும் தருமமும்.

33. பூனைக் கில்லை தவமும் தயையும்.

34. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.

35. சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.

36. முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.

37. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.

38. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.

39. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

40. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

41. குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.

42. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ் சாலை அடையினும் அடைவர்.

43. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தரசு ஆளினும் ஆளுவர்.

44. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

45. எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.

46. மணஅணி அணிந்த மகளிர் ஆங்கே
பிணஅணி அணிந்துதம் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

47. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

48. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.

49. இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

50. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கில் கோற்கஞ் சும்மே.

51. கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே.

52. சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

53. குடியலைத் திறந்து கோலொடு நின்ற
முடியுடை இறைவனும் மூர்க்கனும் பதரே.

54. முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ் செய்(து)
அதன் பயன் உண்ணு வணிகரும் பதரே.

55. வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

56. தன் ஆயுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கைக் கொடுக்கும் பேதையும் பதரே.

57. வாய்ப்பறையாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின் :
பொய்யுடைய ஒருவன் சொல்வன் மையினல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

58. மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

59. இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே.

60. பழியா வருவது மொழியா தொழிவது.

61. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

62. புணைமீ தல்லது நெடும்புனல் ஏகேல்.

63. வழியே ஏகுக வழியே மீளுக.

64. வாழிய நலனே வாழிய நலனே.

Printed at the "Satya Nesan" Press, 3-27, Broadway, Madras.-'35